பாரத மணி

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 29-1-39 வெகுதான்யஹு தைமீ உ 16	முத்து 18

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. ஜயபூர் மர்மம் என்ன?	...	466
2. குறிப்பு	...	467
3. போகிற போக்கில்	...	469
4. வார நடப்பு	...	471
5. என்ன சொல்லுகிறார்கள்?	...	472
6. காலக் கொடுமை (ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்)	...	473
7. சில யோசனைகள் (சகோதரி வி. பாலம்மாள்)	...	474
8. ராப்பயணம் ("ரஸிகன்")	...	476
9. என் சிறுகதை (ஸ்ரீ. ஸ்ரீ. சேதுராமன்)	...	479
10. புரட்சி (ஸ்ரீமதி எஸ். நாமகிரி)	...	481
11. இரக்கம் (ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.)	...	485
12. தங்க வளையல் ("வஸந்தன்")	...	488
13. வலை வீச்சு	...	492
14. சுகாதாரம் (டாக்டர் டி. எஸ். ரமணி)	...	494
15. புத்தக விமர்சனம்	...	496

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



ஜயபூர் மர்மம் என்ன?

பிப்ரவரி முதல் தேதியன்று ஒரு பெரிய நெருக்கடி ஏற்படப் போகிறது. அதற்குள் ஜயபூர் சமஸ்தான அதிகாரிகள் சேத் ஜம்னுலால் பஜாஜ் சமஸ்தானத்திற்குள் நுழையக்கூடாது என்று போட்டிருக்கும் உத்தரவை ரத்து செய்யாவிட்டால் சேத்ஜி அன்று அந்தத்தடை உத்தரவை மீறி விடுவார்.

அவர் அப்படி யொன்றும் அவசரமாக அதை செய்துவிட முன்வரவில்லை. சமஸ்தானத்திற்கு வேண்டிய அளவு அவகாசம் அளித்து முன் எச்சரிக்கை செய்திருக்கிறுர். காந்திஜியைக் கலந்தாலோசித்தும் இருக்கிறுர். சேத்ஜி தடை உத்தரவை மீறுவது கடமை என்று காந்திஜி கூறி விட்டார். சேத்ஜியிடம் கூறியதுடன் மட்டும் நிற்கவில்லை காந்திஜி. தடை உத்தரவை ரத்து செய்யாவிட்டால் ஏற்படப் போகும் நெருக்கடியைப்பற்றி ஜயபூர் சமஸ்தானத்திற்கு ஹரிஜனில் எச்சரிக்கை செய்து விட்டார். சமஸ்தானத்திற்கு மட்டுமல்ல. மத்திய அதிகாரம் சமஸ்தானத்தின் செய்கையை ஆமோதித்து அதற்கு ஆதரவளித்திருந்தால் அதனுல் நெருக்கடி ஒரு அகில இந்திய பிரச்னையாக மாறி விடும் என்றும் சொல்லி விட்டார்.

காந்திஜி இப்படி எழுதிவிட்டார் என்றுல் அவர் அவசரப்பட்டோ யோசிக்காமலோ நிலைமையை செவ்வனே ஆராயாமலோ எழுதுபவரில்லை; ஏதோ ஜயபூர் நெருக்கடியில் மற்ற ராஜபுதன சமஸ்தானங்களின் ஆதரவும் மத்திய சர்க்காரின் அனுமதியும்கூட இருக்கும் என்ற ருஜூக்கள் அவருக்குக் கிடைத்த பிறகுதான் காந்திஜி இவ்விதம் எழுதியிருக்கிறுர். காந்திஜி 'வெறுமனே' பயமுறுத்துகிறவரா?

வைஸ்ராய் சமஷ்டியை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்று ஒருபுறம் பிரசாரம் செய்துகொண்டே மற்ருெருபுறம் இந்த மாதிரி பிற்போக்கான அடக்கு முறை நடவடிக்கைகளுக்கு இடம் கொடுத்தால், வைஸ்ராய் கூறுகிறபடி சர்க்காரிடம் ஒத்துழைப்பு மனப்பான்மை இருக்கிறது என்று எப்படி காங்கிரஸ் நம்ப முடியும்? மாகாணங்களுக்கு எதிரிடையாக சமஸ்தானங்களை மத்திய சர்க்கார் பிற்போக்கு வழியில் தூண்டிக்கொண்டிருந்தால் அவர்கள் எங்காவது வழிக்கு வருவார்களா? வரமாட்டார்கள்.

சமஷ்டி எதிர்ப்புக்குமுன் காங்கிரஸ் சமஸ்தானங்கள் பிரச்னையை ஒருவாறு தீர்த்தாகவேண்டிய நிலைமை நாளுக்குநாள் நெருங்கி வருகிறது. அப்பேர்ப்பட்ட நிலைமையை சர்க்காரும் ஏற்படுத்தி வருகிறுர்கள்.

ஜயபூர் நெருக்கடியில் மத்திய சர்க்கார் சமஸ்தானத்திற்கு ஆதரவளித்தால் சமஷ்டிக்குமுன்பே நாட்டில் பெரிய நெருக்கடி ஏற்பட்டு விடும் என்பதை காந்திஜியின் எச்சரிக்கையிலிருந்து சர்க்கார் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆனுல் ஜயபூர் அதிகாரிகள் பிப்ரவரி முதல் தேதிக்குள் விழிப்புகொள்ளப் போகிறுர்களா? நமக்குத் தோன்றவில்லை. அப்படி அவர்களுக்கு புத்திவந்து விட்டால் நாட்டில் சுதந்திர இயக்கம் வலுப்பதெப்படி?

இதை எழுதிய பிறகு வந்த ஒரு செய்தியிலிருந்து ஜயபூர் அதிகாரிகள் ஒருவேளை பின்வாங்கி தடைவுத்தரவை எடுக்கக்கூடும் என்று தெரிகிறது. பார்ப்போம்.

குறிப்பு

பிச்சைக்காரர்கள்

சென்னை சட்டசபையில் சுகாதார மசோதா விவாதம் நடக்கும்பொழுது வியாதியஸ்தர்களான பிச்சைக்காரர்களை ஒதுக்கிவைப்பது விஷயமாக ஒரு அங்கத்தினர் பேசினதற்கு பதில் கூறுகையில் மந்திரி டாக்டர் ராஜன் அப்பேர்ப்பட்ட பிச்சைக்காரர்களின் தொகை மாகாணத்தில் 10 லட்சம் என்றும், அவர்களை ஒதுக்கிவைப்பது என்ற பிரச்னையில் பொருளாதார இடைஞ்சல் இருக்கிறதென்றும் கூறினர்.

குஷ்டம் முதலிய கொடிய தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்ட பிச்சைக்காரர்களின் தொகை நமது மாகாணத்தில் 10 லட்சம் என்பதாலேயே பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பது தெரிகிறது. இவ்வளவு பரவியிருக்கும் வியாதியை எந்தவிதத்திலாவது தடுக்கவேண்டியது அத்தியாவசியமாயிருக்க கனம் டாக்டர் ராஜன் அதை இவ்வளவு லேசாகப் பொருளாதாரக் காரணத்தைக் கூறி தூரத்தள்ளிவிட்டது பற்றி வருந்துகிறோம். அதிலும் சென்னையில் குஷ்டரோகிகளின் கோரக் காட்சி சகிக்க முடியாததாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் வந்து பிச்சை கேட்கிறார்கள். அருகில் வருகிறார்கள். கார்ப்பொரேஷன் இந்த விஷயத்தில் யாதொரு நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. நகர சுகாதாரத்திற்கு ஆபத்தாக இருக்கும் இந்த விஷயத்தில் ஒன்றும் கேள்விமுறை இல்லைபோ லிருக்கிறது.

இந்தக் குஷ்டரோகிகளான பிச்சைக்காரர்களை உடனே ஒதுக்கி வைக்கவேண்டியது மிகவும் முக்கியமான காரியமென்று வற்புறுத்துகிறோம். நகரசபையோ சர்க்காரோ உடனே கவனம் செலுத்தவேண்டும்.

சங்கீத மண்டபம்

சங்கீத வித்துவத் சபை முடிவு விழாவின் பொழுது அகாடெமித் தலைவர் ராவ் பகதூர் ஸ்ரீ. கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் பேசும்பொழுது சங்கீத வித்வத்சபைக்கு வரும் வித்வான்கள் தங்கவும் கச்சேரிகள் நடத்தவும், ஒரு சங்கீத மண்டபம் சென்னையில் ஸ்தாபிக்க வேண்டுமென்று அகாடமியார் யோசிப்பதாகக் கூறினர்.

அகாடமியை இவ்வளவு ஏற்பாடாக வருஷா வருஷம் கூட்டி நடத்தும் பெருமை ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரைச் சேர்ந்தது. அதற்கு நிரந்தரமாக ஒரு நிழலும் அவர் தேடிக் கொடுத்து விட்டாரானல் மிகவும் நன்ருக இருக்கும். ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யர் முயற்சி கைகூடுவதற்குப் பிரமுகர்களும் பொது ஜனங்களும் முன் வந்து பண உதவி செய்யவேண்டியது அவசியம்.

மத்திய சர்க்கார் பொறுப்பு

அகில இந்தியத் தொழில்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்த சந்தர்ப்பத்தில் வைஸ்ராய், தொழில் அபிவிருத்தி விஷயத்தில் மத்திய சர்க்காரின் பொறுப்பையும் குறித்துப் பேசினர். தொழில்கள் என்பது புது அரசியலின் கீழ் மாகாண விஷயமானபோதிலும் அகில இந்தியாவிற்கும் ஒரே ஒரு பொருத்தமான தொழில் அபிவிருத்தித் திட்டத்தை மத்திய சர்க்கார்தான் சரிவர வகுத்து நடத்த முடியும். மத்திய சர்க்காரில், இந்தியாவுக்கு, அதிகாரம் இருந்தால் இந்தியத் தொழில் அபிவிருத்திக்கு இடைஞ்சலாக இருக்கும் பாதுகாப்புகளையும் சலுகைகளையும் ஒழித்து உள்நாட்டுத் தொழில்களுக்குப் போதுமான ஆதரவு அளிக்க முடியும். இல்லாவிட்டால் மாகாணங்கள் பெரிய தொழில்கள் விஷயமாக ஒன்றுமே செய்ய இயலாது என்பது நிச்சயம்.

இதை உணர்ந்துதான் தேசியப் பொருள் அபிவிருத்தி திட்டக் கமிட்டி வேலை ஆரம்பித்திருக்கிறது. பல மாகாணங்களின் திட்டங்களையும், பல தொழில் அம்சங்களின் திட்டங்களையும் பொருத்தி ஒற்றுமை ஏற்படுத்தி, ஒரே திட்டமாக வேலை செய்தால்தான் உண்மையான பலன்கள் ஏற்படும். அப்பொழுதும் ஸ்ரீ வி. எஸ். ரங்கஸ்வாமி சொன்னது போல இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் சரியான வியாபார ஒப்பந்தம் வரவேண்டுமானல் முதலில் சரியான அரசியல் ஒப்பந்தம் ஏற்படவேண்டும். அது ஏற்பட்டால் எல்லாம் சரியாகப்போகும். மடையைத் திறக்கும் திறவுகோல் இருந்து விட்டால் பிறகு பாய்ச்சலைப் பற்றி கவலை யேது?

பஞ்சாயத்து ஆபீஸர்கள்

பஞ்சாயத்துகளில் நிர்வாகத்தைச் சரிவர நடத்த பத்துப் பஞ்சாயத்துகளுக்கு ஒருவராக சர்க்கார் நிர்வாக ஆபீஸரை நியமிக்க வேண்டும் என்று பஞ்சாயத்துகள் அமைப்

பைப்பற்றி போனவாரம் எழுதியபொழுது குறித்தோம். நகரசபைக்குக் கமிஷனர் எப்படியோ அப்படித்தான் அவர் பஞ்சாயத்துகளுக்கு. இது கிராம சுயஆட்சி சுதந்திரத்தைப் பாதிக்குமென்று சிலர் கருதலாம்.

சமீபத்தில் அமெரிக்காவில் இந்தமாதிரி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு நல்ல பலன்களையும் அளித்து வருவதை நாம் கவனிப்பது நல்லது. சுமார் 450 நகரங்கள் இந்தமாதிரி முனிசிபல் கமிஷனர்கள் போல "ஸிடி மானேஜர்" என்ற உத்தியோகஸ்தர்களை நியமித்து வருகின்றன. மேயர் ஸ்தானத்தை நகரசபையிலிருந்து எடுத்து விட்டார்கள். இந்த உத்தியோகஸ்தர் சம்பளம் பெற்று நகரசபையின் வேலைகளை ஒரு தனி ஸ்தாபனத்தின் தலைவர் போல நடத்தவேண்டியது. இதனால் நகரசபையின் செலவும் லஞ்சமும் குறைந்துவிட்டது. இது அமெரிக்கா அடைந்துள்ள அனுபவம். இந்த ஏற்பாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் முரண்பாடே இல்லை. பஞ்சாயத்தின் ஊழியராக அந்த உத்தியோகஸ்தர் பஞ்சாயத்தின் வேலையைச் செய்துக் கொடுக்கிறார்.

முனிசிபாலிடிகளில் சில இடங்களில் கமிஷனர்களுக்கும் நகரசபைக்கும் அபிப்பிராய பேதங்களும் தகராறுகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அப்பேர்ப்பட்ட இடைஞ்சல்களைக் கொஞ்சம் பொறுப்புடனும் பொறுமையுடனும் ஆராய்ந்தால், சுலபமாக நிவர்த்தி செய்துவிடலாம்.

அடுத்த ராஷ்டிரபதி

மௌலானா அசாத் தான் அடுத்த ராஷ்டிரபதியாக வேண்டுமென்று நாம் எல்லோரும் எண்ணி இருந்தோம். அவர் திடீரென்று விலகிக் கொண்டு டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவைத் தேர்ந்தெடுக்கும்படி தொகுதிகளைக் கேட்டுக் கொள்ளுகிறார். இந்த நிலைமையில் அந்த விதமே தேர்தல் போட்டியின்றி நடைபெற வேண்டியிருக்க, ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தானும் போட்டி போடப் போவதாகக் கூறி யிருப்பதைக் கண்டு ஆச்சரியமும் வருத்தமும் அடைகிறோம்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் எதற்காக இப்படிப்பட்ட தீர்மானம் செய்தார் என்று தெரியவில்லை. அவர் கூறி யிருக்கும் காரணங்கள் நமக்கு சரியெனப் படவில்லை. மௌலானா அசாத் டாக்டர் பட்டாபி பெயரைக் குறித்ததற்கு காரணம் இருக்கின்றன வென்பதை ஸ்ரீ போஸே அறியக்கூடும்.

மேலும் ஸ்ரீ போஸின் தேக நிலையே சரியாக இல்லாதபொழுது வருகிறவருஷமும் அவர் ராஷ்டிரபதியாக இருந்து காரியத்தை நிர்வகிக்க முடியுமா? அப்படிச் செய்தால் மேலும் அவருக்கு தேக அசௌக்கியம் ஏற்படத்தானே செய்யும்.

டாக்டர் பட்டாபி ராஷ்டிரபதியாக வேண்டுமென்று நாம் கோருவதால் ஸ்ரீ போஸின் வேலையிலோ தொண்டிலோ நாம் அதிருப்தி கொண்டுவிட்டோமென்று அர்த்தமல்ல.

புரட்சி மந்திரி

இந்த அசெம்பிளிக் கூட்டத்தில் முக்கியமான இரண்டு விஷயங்கள் சுகாதார மசோதா சட்டமானதும், பிரகாசம் கமிட்டி அறிக்கை விஷயமும்தான்.

கமிட்டியின் அறிக்கையை சட்ட சபைக்கு சமர்ப்பிக்கும்பொழுது மந்திரி ஸ்ரீ பிரகாசம் தெளிவாகவும், புள்ளி ஆதாரங்களுடனும் செய்த பிரசங்கம் மிகவும் உபயோகமானது. எவ்வளவு தூரம் அவர் 150 வருஷ அரசாங்க ரிகார்டுகளை ஆராய்ச்சி செய்து பார்த்து தன் முடிவுகளுக்கு வந்திருக்கிறார் என்பது அதிலிருந்து விளங்குகிறது.

அவருடைய முடிவுகளில் சிலவற்றில் நமக்கு அபிப்பிராய பேதம் இருக்கலாம். உதாரணமாக அவர் ஜமீன் குடிகளை நிலச்சுவான்தாரிகள் என்று கூறும்பொழுது அதன் பொருளை விளக்கியதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இதைப்பற்றி நாம் ஏற்கனவே எழுதி இருக்கிறோம். கமிட்டியின் சிபார்சுகள் மசோதா உருக்கொள்ளும்பொழுது மறுபடியும் இந்தப் பிரச்னையைப் பற்றி எழுத உத்தேசிக்கிறோம்.

ஸ்ரீ. பிரகாசத்தின் முடிவுகள் மிகவும் புரட்சிகரமானவை என்பதில் சந்தேகமில்லை. வெறும் நியாயத்தைத்தான் சொல்லுகிறேன் என்கிறார் பிரகாசம். சொல்லும்போது அவர் குரலில் உருக்கமும் வேகமும் இருக்கிறது. காங்கிரஸ் மந்திரிகள் சும்மா இருக்கவில்லையென்பதற்கு இந்த அறிக்கை ஒரு அத்தாட்சி. இதேமாதிரி நிலவரி விஷயத்திலும் ஸ்ரீ. பிரகாசம் ஒரு முடிவிற்குக் கூடியசீக்கிரம் வருவாரா?

போகிற போக்கில்



நான் சென்ற வாரம் நியமனம்செய்த கிராமப் பஞ்சாயத்து அதிகாரிக்கு என்ன வேலைகள்? அவர் ஒவ்வொரு கிராமத்திலும் செய்யவேண்டிய முக்கியமான தொண்டுகளும் சீர்திருத்தங்களும் என்ன? நமது கிராமங்களின் தற்காலத்து க்ஷீண நிலைமையில் சீர்திருத்தவேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. அவைகளை விஸ்தரித்தால் ஒரு ராமாயணமாகும். நமது உள்ளம் திடுக்கிடும். ஆனால் அவைகளில் முக்கியமாய் தாய்ச் சீர்திருத்தங்களாகச் சில இருக்கின்றன. ஆராய்ச்சி செய்து அவைகளை நாம் தெரிந்துப் பொறுக்கி எடுத்துவிட்டால் மந்திர சக்தி கிடைத்தவனுக்குக் கையில் பலமும் முகத்தில் களையும் ஏற்படுவதுபோல் நமது கிராமங்களுக்கும் வலுவும் அழகும் ஏற்படும். என் ஆராய்ச்சியில் இந்த ஐந்து சீர்திருத்தங்களும், செயலும், ஸ்தாபனங்களும் கிராமப் புத்துயிருக்கு ஜீவதாதுவென்று தோன்றுகிறது.

1. ஒரு ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடம்.
2. ஒரு பசுமடம் (டெய்ரி அல்லது பண்ணை.)
3. ஒரு விவசாயப் பண்ணையும், கைத்தொழில் சாலையும்.
4. ஒரு ஆஸ்பத்திரி.
5. பல வேலைகளை கவனிக்கும் கூட்டுறவு சங்கம். (வாங்கவும், விற்கவும்)

இந்த ஐந்து சீர்திருத்தத் திட்டங்களும் ஒவ்வொரு கிராம சமூகத்தின் சுகவாழ்க்கைக்கும் இன்றியமையாதவை என்பதில் எவருக்குச் சந்தேகம்? ஒருவருக்குமில்லை. நம்மிடமிருந்தே வசூலிக்கும் வரியில் சம்பளம் வாங்கி, உண்மையான கிராமத்தொண்டு ஒன்றும் செய்யாமல் கிராமச் சண்டை சச்சரவுகளுக்கு மூல புருஷனாய் இருந்து பிழைத்துவரும் கர்ணம், பட்டாமணியம் இவர்கள் நீங்கலாக எந்தக் கிராம வாசியும் இந்த திட்டத்தைக் கைகூப்பி ஒப்புக்கொள்வான் என்பதில் ஐயமில்லை. தேகத்திற்கு ஐம்புலன்கள் எப்படியோ அப்படியேதான் இந்த ஐந்துவித உணர்ச்சியும் செயலும் நமது கிராமத்திற்குப் புத்துயிரளிக்க அவசியமானவை. இவை ஒவ்வொன்றையும் நாம் விவரமாய் விசாரித்துப் பார்ப்போம்.

1. ஆரம்பக் கல்வித் திட்டம்:—பெரும்பாலும் வர்தா திட்டத்தின் கருத்தின் விசேஷத்தை அனுசரித்து நாம் விடா முயற்சியுடன் பத்து வருஷ காலமாவது இந்தப் புதுக்கல்வி முறையில் ஏழு வருஷத் திட்டத்தை வெட்டிக் கொத்தி பாடுபட்டால் தான் நம்மை பல நாளாகப் பீடிக்கும் பழைய காய்ந்துபோன சல்லிவேர் அறுபட்டு நமது வாழ்வில் புது வேர் விழும். மரம் மட்டையிடும். குலை வைக்கும்.

ஆரம்பக்கல்வித் திட்டமென்றால் கழுதைகூட சுமக்கக்கூடாத, ஓர் சுமைப் புஸ்தகங்களை குழந்தைகள் கையில் ஓர் சாக்குப் பையில் போட்டுக் கொடுத்து, வயிறு நிறையச் சோற்றைப் போட்டு 10 மணி வெயிலில் பள்ளிக்கு விரட்டுவதல்ல. காலையில் பாட்டும், பஜனையும், கொஞ்சம் படிப்பும், கணக்கும், இரண்டு புஸ்தகங்களுடன் 8 மணி முதல் 11 மணி வரையில் உல்லாசமாய், கையில் பிரம்பை வீசாத உபாத்தியாயரும் நடுநடுங்காத மாணுக்கர்களும் கூடி, நடத்துவது உண்மையான ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடமாகும். மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரையில் சிறு குழந்தைகளுக்கு, அவரவர்களுக்கு இஷ்டம்போல், லாயக்கான கைத்தொழில்களை விளையாட்டுப்போல் சொல்லிக்கொடுக்க வேண்டும். கைத்தொழில் என்றால் என்ன?

மனிதனுக்கு முதல் தேவை உணவு, அன்னம், கறிகாய், பழம் பால். கையால் உழைத்து இவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களே உண்மையான கைத் தொழில்களாகும். பாக்கிக் கைத்தொழில் களெல்லாம் நமது நாகரிக மோசடிப் பிரட்டு. ஆகையால் முதல் முதல் இவற் றைத் தான் நாம் கவனிக்கவேண்டியது அவசியம். இவைதான் ஈசனுக்குப் பிரீதி.

ஆடை ஆபரணங்களை உற்பத்தி செய் யும் கைத்தொழில்கள் பொய்ச்செல் வத்தைப் பெருக்கி வியாபாரிகளின் ரகசிய லாபத்தையே தேடுவன ஆகும்—விழ லுக்கு நீர் இறைத்தாற்போல். ஆகை யால் என் அபிப்பிராயத்தில் ஒரு தோண்டி நீரை ஓடும் வாய்க்காலில் மொண்டு குழந்தைபோல் காத்து நிற்கும் தென்னம் பிள்ளைக்கு ஊற்றுவதோ, கறிகாய் செடி கொடிகளுக்கும் பல விருக்ஷங்களுக்கும் கொட்டுவதோ, தாய்ப் பசுவிற்கும் கன்றிற் கும் புல் பிடுங்கிப் போடுவதோ, இவை களெல்லாம் உண்மையான உயர்தரக் கைத் தொழில்களாகும்.

ராட்டை சுற்றுவதுகூட இரண்டாவது பக்ஷம் தான். ஆடை, ஆபரணத்தில் மூழ்கிக் களித்துவரும் நமது நாகரீகத் தைத் திருப்தி செய்யத்தானே ஆடை ஆபரணங்கள்? மகாத்மா காந்தி தன் சொல் லுக்கு மேலாய் நடத்திக் காட்டிவருவது போல் துணிமணிகளை கதராயிருந்தாலும், கேவலம் அவசியத்திற்கு மேல் வாங்கக் கூடாது. கதராயிருந்தாலும் துணிமணி களை ஏராளமாய் வாங்கிக் குவித்து வண் ணுனுக்குப் போட்டு பீரோவில் வைத்து வருபவர்களுக்கு அழகு காட்டுகிறவன் தேசபக்தனுமல்ல; மகாத்மாவின் பக்தனு மல்ல.

இந்த ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடத்தை நடுத்தெருவிலே ஒரு இடிந்த வீட்டை மிக்க வாடகைக்கு வாங்கி அதில் வைக்கக் கூடாது. கிராமத்திற்கு அருகாமையில் குளத்தோரமோ, கோவில் பக்கமோ அல் லது ஓடும் வாய்க்கால் ஓரமோ உள்ள ஓர் அழகான புஞ்சைப் பிரதேசத்தில் மூன்று ஏகர் சதுரம் பொறுக்கி எடுத்து அதைக் கிளுவை வேலி வைத்தமைத்து (இரும்பு முள் வேலியைத் தந்தியடித்து கண்டி ராக்டர் மூலம் வரவழைக்காமல்) குழந்தை களை வைத்துக்கொண்டே அதை ஒரு தோட்டமாகச் செய்து விடலாமே! இதல் லவோ உயர்தர ஆரம்பக்கல்வி முறை? உண்மைக் கைத்தொழில்? உயிர் உயிருக்கு கொடுக்கும் உயிர்.

கட்டிடங்களெல்லாம் விழல்போட்ட குடிசையாக இருந்தால் போதும். இப்படி அமைத்துள்ள பள்ளிக்கூடத்தில் ஒரு சிறிய நாடகக் கொட்டகையும், வாசக சாலையும், புஸ்தகசாலையும், ரேடியோவும், கைத்தொழில் சாலையும் ஸ்தாபிக்க வேண்டும்.

தக்க குணமுள்ள ஓர் உபாத்தியாயர் இப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடத்திற்கு வேண்டியதவசியமென்று ஆசிரியர் வாக் கால் நானும் கூறவேண்டுமா? தோட்டத் திற்கே உயிர் வேலி வேண்டுமென்று வேண்டிக்கொண்டேனே? உண்மையில் உயிருள்ள உபாத்தியாயர் கிடைத்தால் தான் இந்த ஆரம்பக்கல்வி வார்தா திட்டத் திற்கே உயிருண்டாகும்.

சொல்ப பிதுரார்ஜித சொத்தை விற்று பி. ஏ. பாஸ் செய்துவிட்டு வேலையில்லாமல் வேட்டாத்துப் பண உதவியைக்கொண்டு திரள் திரளாய் சினிமாக் கொட்டகைக்குப் போய் சுருள் சுருளாய் சுருட்டைப் பிடித்து பொய்க் கண்காட்சி ஆனந்தத்தில் மூழ்கி, மறுநாள் காலையில் 'பெட்காபி' சாப் பிட்டுவிட்டு பத்துமணிக் கெழுந்திருந்து 'டிரஸ்' செய்து கொள்ள ஆரம்பிக்கும் நமது நவீன நாகரீகவாலிபத் துருப்புகளை காங்கிரஸ் சர்க்கார் கோலெடுத்துக் கட்டா யப்படுத்தி மகாத்மா காந்தியும், காங்கிரஸ் மந்திரி சபையும் நமது கிராமங்களுக்கு அனுப்பவேண்டும். அப்பொழுதுதான் இவ்வாலிபர்கள் புது வேர் ஊன்றி நமது கிராமங்களுக்கு உயிர்வேலி யாவார்கள். நமது ராஜாஜி இந்த விஷயத்தில் எவ்வளவு கட்டாயத்தைச் செலுத்தினுலும் கேட்பா ரில்லை. இதில் அவர் தன் கூர்மையான புத்தியையும், மனவலிவையும் செலுத்தப் படாதா? திவ்வியமான ஊற்று ஜலம் எடுப்பாரன்னியில் நகர சாக்கடையில் வீண்போகிறதே!

கிராமத்திற்கு ஒரு சரியான பசுமடத் தால் கிடைக்கும் லாபத்தைப்பற்றி அடுத்த வாரம் எழுதி நான் கொஞ்சம் புண்ணியம் பெறலாமென்று எண்ணு கிறேன்—நீங்கள் சலித்துக் கொட்டாவி விடாமலிருந்தால்!

மணி

வார நடப்பு

உலகத்தில் நிலவி இருக்கும் யுத்த பயத்தைப் போக்க முயன்று பிரிட்டன் தோல்வியடைந்ததல்லவா? சேம்பர்லேன் மியூனிச்சில் கொடுத்ததைப்போல் வாக்குறுதிகளோ அல்லது நாடோ கொடுத்துவிட்டு வராவிட்டாலும் ரோமிலும் தோல்வியடைந்தார் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் அவர் போய் திரும்பினதும் திரும்பாததுமாக சென்ற வாரம் ஐரோப்பாவில் மறுபடியும் யுத்தப் பேய் தலைவிரித்து ஆட ஆரம்பித்திருக்கிறது.

ஸ்பெயினில் கலகக்காரர்கள் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வதைப்போல் 'சட சட' வென்று முன்னேறி பார்ஸிலோனுவைப் பிடிக்கப் பார்க்கிறார்கள். பிரான்ஸ சர்க்கார் ஸ்பெயின் ராஜாங்கத்துக்கு ஒத்தாசை செய்வதாக கலகக்காரர்கள் புகார் செய்கிறார்கள்! ஆனால் இதாலிய ஜெர்மன் ஆகாய விமானங்கள் பார்ஸிலோனுவின்மேல் பறந்து செல்கின்றன!

இந்த நடு நிலைமை நியாயத்தை ரத்து செய்யும்படி லண்டனில் ஆர்ப்பாடங்கள் நடக்கின்றன. மாஜி பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் சேம்பர்லேன் 'சர்வாதிகாரிகளிடம் கெஞ்சுவதை' கண்டித்திருக்கிறார். ஸ்பெயின் விஷயத்தை விவாதிக்க சபை கூட்டக் கூட சேம்பர்லேன் மறுத்துவிட்டாரென்றால் அவர் சர்வாதிகாரிகளைக் கண்டு எவ்வளவு தூரம் பயந்திருக்க வேண்டும்? இந்தக் கோழைத்தனத்தால் உலகத்தில் சமாதானம் உண்டாகுமென்று யாராவது நினைப்பார்களா?

கலகக்காரர்களின் முன்னேற்றத்தைப் பார்த்து பிரான்ஸ் கலங்கிப் போயிருப்பதைக் காண்கிறோம். இதுவரை ஸ்பெயின் சர்க்காருக்கு உதவி செய்த பிரான்ஸ் இதை எப்படி சகித்துக்கொள்ளப் போகிறது, என்ன செய்யப்போகிறது, இதனால் உலகத்தில் என்ன நேரும் என்பதை வரும் வாரம் தான் நமக்குச் சொல்லக்கூடும்.

சர்வாதிகாரிகள் நிலைமையின் நெருக்கடியை நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஜெர்மனியில் பொருளாதார நிர்வாகத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ரீச் பாங்கின் தலைவர் டாக்டர் ஷாட் விலக்கப்பட்டு பொருளாதார மந்திரி டாக்டர் பங்க் அந்த வேலையைச் சேர்த்துப் பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த மாறுதலுக்குக் காரணம் சர்க்கார் என்ன கூறிய போதிலும் வரப்போவது அபாய காலம்தான் என்பதில் சந்தேகமில்லை. கடைசியாக வந்த ஐரோப்பியச் செய்திகளைப் பார்க்கப்போனால் கலகக்காரர்கள் பார்ஸிலோனுவைப் பிடித்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. இந்த முத்து உங்கள் கைக்கு வந்து சேருவதற்கு முன்னதாகவே கலகக்காரர்கள் ஸ்பெயின் சர்க்காரைத் தோற்கடித்து விடலாம்.

அரபிய மகாநாடு முடிவடைந்துவிட்டது. பிரதிநிதிகளுக்குள் ஏகோபித்த அபிப்பிராயம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கிலாந்துக்குப் போகும் எகிப்திய அங்கத்தினர்கள் பொறுக்கப்பட்டுவிட்டார்கள். இதே சமயத்தில் ஹைபாவிலும் ஜெருசலத்திலும் குழப்பம் இன்னும் தீரவில்லை என்பதையும் அறிகிறோம்.

சென்ற வாரம் ஐரோப்பாவில் நடந்த மற்றொரு முக்கியமான விஷயம் ஐரிஷ் கிளர்ச்சி. இங்கிலாந்தில் பல இடங்களிலும் ஜலக்குழாய்களைத் தகர்த்தெறிந்துவிட ஐரிஷ் இயக்கத்தில் சம்பந்தப்பட்ட பலர் முயன்றதாகக் கூறப்படுகிறது. பல இடங்களில் வெடிகுண்டு விபத்து ஏற்பட்டபோதிலும் பெருத்த நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

இந்தியாவில் சந்தோஷகரமான பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவுந்த் தேச மன்னர் பொறுப்பாட்சியை அளித்து அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார். காங்கிரஸ் தலைவர்கள் பலர் அந்த சமயத்தில் விஜயம் செய்து கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

அடிமைத் தளையிலிருந்து மற்றும் ஒரு வகுப்பாரும் விடுதலை பெற்றிருக்கின்றனர். குஜராத்திலிருக்கும் டூப்லாஸ் என்ற வகுப்பார் கிட்டத்தட்ட அடிமைகளைப் போலவே இருந்து வந்தார்கள். இப்போது அவர்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது.

சமஸ்தானங்கள் சென்ற சில வாரங்களாக முன்னேறிக் கொண்டிருப்பதற்கு திருஷ்டி வந்து விட்டதோ என்னமோ, இப்போது ஜட்கா வண்டிக் குதிரைபோல பின்னே போவதைப் பார்க்கிறோம். சிகார் சம்பந்தமாக ஜெய்பூர் சர்க்கார் வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை என்று கூறுகிறார்கள். பின்னும், ராஜ்கோட் தர்பார் பொறுப்பாட்சிக்கமிட்டி அங்கத்தினர்களைப் பொறுக்கும் விஷயத்தில் சர்தாருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற யில்லையென்று புகார் கிளம்புகிறது.

என்ன சொல்லுகிறார்கள்?

தற்போதுள்ள கட்டுக் கடங்காத கட்சிச் சட்டசபைகள் எவ்வளவு தூரம் செல்லுமென்பதை நினைத்துப் பார்த்ததும் நான் நடுக்கமடைகிறேன். தற்காலத்தில் செய்யப்படும் சட்டங்களில் பல அவசரக் கோலமானது; தீர ஆலோசனை செய்யப்படாதது; ஒருவிதக் கொள்கையுமற்றது. கலை என்று அதைக் கருதவே முடியாது. தற்காலத்திய சட்டசபை அங்கத்தினர்கள் சட்ட ஞானத்திற்காக, பாஷாஞானத்திற்காகப் பொறுக்கப்படவில்லை. சட்டசபைகளுக்குச் சட்டம் இயற்றக்கூட அவகாசமில்லை; ஒரு மூச்சில் சட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன.

—ஸ்ரீ. வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார்.

* * * *

காங்கிரஸ் அரசாங்கங்கள் முஸ்லீம்கள் நலனுக்காக எதைச் செய்தாலும் அதனால் பெரும்பான்மை வகுப்பிற்கு அநீதி ஏற்பட்டாலொழிய, எதையும் நியாயமானதென்று முஸ்லீம் லீக் ஒப்புக்கொள்ளாது என்பது எனது அபிப்ராயம். முஸ்லிம் லீக்கால் தற்காலம் தீங்கான நிலைமை ஏற்பட்டிருந்தபோதிலும், சிறுபான்மையோர் குறைபாடுகளை, உண்மையில் ஏதேனும் இருந்தால், நீக்கி விடும்படி காரியக்கமிட்டி மாகாண சர்க்கார்களுக்கு உத்திரவு போட்டிருப்பதைக் குறித்து சந்தோஷப்படுகிறேன்.

—ஸர் வாஸிர் ஹுஸேன்.

* * *

மதம் இப்போது சீர்குலைந்து விட்டது. அர்த்தமற்ற குருட்டு நம்பிக்கைகளிலும், விரதங்களிலும் மதம் அடங்கியிருக்கிறது. உலகத்தில் வாழ்க்கைக்காக வேண்டி ஒரு குறிப்பிட்ட மதத்தைக் கடைப்பிடிப்பதாயிருந்தால், மதவேறுபாடுகள் வளர்ந்துக் கொண்டுதானிருக்கும். மூட நம்பிக்கைகளை உதறி எறிந்துவிட்டு, மனுஷனுக்குப் பொதுவான விஷயங்களுக்கு வந்தால் தான் விமோசனம் உண்டு.

—ஸ்ரீ. ஜே. கிருஷ்ணமூர்த்தி

ஜனநாயக அரசாங்கத்தில் தொகுதிகளை இரண்டாகப் பிரிப்பதென்பது ஜனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது; ஒழுங்கீனமானது என்றுகூடச் சொல்லலாம். இந்திய நாஷனல் காங்கிரஸ் வகுப்புத்தீர்ப்பு சம்பந்தமாக நடுநிலைமை வகிக்கிறதென்னமோ வாஸ்தவம்தான். சிறுபான்மையோரின் பூர்ண சம்மதத்துடன் அதை மாற்ற உத்தேசிக்கிறது. ஆனால் வகுப்புத்தீர்ப்பு தேசத்திற்கு விரோதமானது; ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று காங்கிரஸ் எவ்வளவோ தடவை கூறிவந்திருக்கிறது. சிறுபான்மையோரின் சந்தேகங்களையும் பயங்களையும் நாம் கிளப்பக்கூடாதுதான். ஆனால் இந்த தனித்தொகுதி முறை தேசத்திற்கு விஷம்போன்றது; தேசம் சுயேச்சையடையவேண்டுமென்றால் இது தொலையவேண்டும் என்று நாம் கூறாவிட்டால் நாம் நமது தேசமுன்னேற்றத்திற்கும், நமது கொள்கைக்கும் வஞ்சனை செய்தவர்களாவோம்.

—ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி.

* * * *

எந்த நிமிஷம் நீங்கள் எதிர் கட்சியே இல்லை என்று உணருகிறீர்களோ, எந்த நிமிஷம் எல்லோரும் ஒரே கட்சியில் சேர்ந்து விடுகிறீர்களோ, அந்த நிமிஷம் ஜனநாயகத்தின் வேர்களை யறுத்து கொடுங்கோன்மையின் விதைகளைத் தெளித்தவர்களாவோம். இந்தியாவில் ஜனநாயகம் நிலவவேண்டுமென்று ஆசைப் படுபவர்கள் இந்த மாயமான ஒற்றுமையை நாடக்கூடாது. சொல்லப்போனால், பல வேறு அபிப்பிராய பேதங்களையும் வெளியிட வசதியளிக்கவேண்டும்; எல்லா பிரச்னைகளையும் விவாதிக்கவேண்டும்; ஒரே ஒரு கட்சிமட்டும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

—ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டி.

காலக் கொடுமை

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி)

I

காலக் கொடுமையை என்சொல்வேன்—ஆல
காலத்தை யுண்ட கடவுளே!
ஞாலத்திலே தர்ம தேவதை—ஏதும்
நாதியற் றின்று தவிக்கின்றாள்.
எத்தனைப் பௌதிகச் சூட்சிகள்—எங்கும்
எத்தனை யந்திர மாயங்கள்!
அத்தனையும் எமன் போலவே—நாளும்
ஆருயிர்க் கூட்டத்தை மாய்த்தன!

அறத்தை நினைப்பவர் இல்லையே—நெஞ்சில்
அன்பை வளர்ப்பவர் இல்லையே......!
பிறர்க்கென வாழுவோ ரில்லையே—கொல்லும்
பேயெனச் செய்கின்றார் தொல்லையே!
பஞ்சமா பாதகப் பேய்களை—வாழ்வு
பாழாகப் போக வளர்க்கின்றார்......
அஞ்சுது நெஞ்சிதை யெண்ணி லோ—தர்மம்
ஆதர வற்றதிம் மண்ணிலே.

பாதகர் நல்லவர் வீட்டிலே—பூந்து
பட்டப் பகற்கொள்ளை யிட்டனர்.
சோதர ரென்றுற வாடினோர்—உள்ள
சொத்தைப் பறித்துக்கொண் டோடினர்.
படுத்தவர் பாயைப் பறிக்கின்றார்—புண்
பட்டவர் வீட்டை யெரிக்கின்றார்......!
அடுத்தவர் நாட்டில், வலுத்தவர்—ஐயோ
ஆகாச குண்டிட் டடிக்கின்றார்.

சித்தம் நிலையாத பித்தர்கள்—மதச்
சேகண்டி கொட்டி வருகின்றார்.
பத்திவைராக்கிய மற்றவர்—பழம்
பாட்டி கதைகள் பொழிகின்றார்!
உள்ளத்தில் உள்ளதை யெண்ணிடார்—வாயால்
ஓயாது தர்க்கங்கள் பண்ணுவார்.
கள்ள நடையுடை காட்டுவார்—வெள்ளைக்
காசினிலே குறி நாட்டுவார்.

கிராம சேவை :

சில யோசனைகள்

[சகோதரி வி. பாலம்மாள்]

பாரதநாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பெயர்கள் கிராமவாசிகளாகவும் விவசாயிகளாகவும் இருக்கிறார்கள். ஒருகால் நெற்களஞ்சியங்களாகவும் தான்ய பொக்கிஷங்களாகவும் விளங்கிய கிராமங்கள் தற்சமயம் பாழ்பட்டுக் கிடக்கின்றன. வருஷத்தில் சுமார் எட்டு மாதங்கள் ஓய்வு பெற்றிருந்த கிராமவாசிகள் பல சிறு தொழில்களைச் செய்து பணமீட்டி வந்தார்கள்.

கால்நடைகள் நன்கு விருத்தியடைந்து உழவிற்கும் பால் கறவைக்கும் தட்டின்றி நிலமும் மக்களும் செழுமையுற்றிருந்தார்கள். உழவு நடவு முதலிய பயிர் வேலைகளெல்லாம் பெரும்பாலும் எஜமானனின் உழைப்பிலும் மேற் பார்வையிலும் நடைபெற்றன. சாலையோரங்களிலும் திடலிலும் காய்கறிகள் பச்சைப் பசேலெனக் காய்த்துக் கிடந்தன. கிராம வாயிலின் அருகில் அமைக்கப்பெற்ற தண்ணீர்ப் பந்தல்கள் குளிர்ந்த தீர்த்தமும் நீர் மோரும் வார்த்து பாட்டைசாரிகளின் களைப்பை அகற்றின. ஒற்றுமையும் ஒத்துழைப்பும் கட்டுப்பாடும் சுகாதரத்வமும் கிராமவாசிகளிடம் நிலைபெற்றிருந்தன. அத்தகைய கிராமங்கள் க்ஷீணதசையடைந்ததற்கு அறிஞர்கள் பல காரணங்களை எடுத்துரைக்கின்றார்கள், முடிவாக ஆங்கிலப் பட்டதாரிகளான வாலிபர்களை கிராமம் செல்லும்படிக்கும் சிலர் போதிக்கின்றனர். ஆகவே கிராம புனருத்தாரணத்திற்குக் கையாள வேண்டிய முறை யாவை என்பதைக் கண்டு பிடிப்பதே தேசாபிமானிகளின் நோக்கம்.

முதன் முதலாகக் கிராமவாசிகளில் ஒரு சாரார் கடன்காரரானதற்கு ஆங்கிலப் படிப்பே மூல காரணம். மகனை ஆங்கிலம் படிப்பிக்க நகர வாசத்தில் குடித்தனம் செய்தும் ஆங்கிலம் படித்த ஆண் மகனை மருமகனுக்கிக் கொள்வதற்காக ஆயிரக் கணக்கான வரதக்ஷிணை கொடுத்துச் சீர் வரிசைகள் செய்தும் அவர்கள் கடன்படலானார்கள். கிராம வாசிகள் உடம்பாலுழைத்துச் சேமிக்கும் தானியங்களைச் சோம்பேறிகளான நகர வாசிகள் தின்று அழிப்பதல்லாது ஜீவாதாரமான விவசாயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தவில்லை. நகரத்தில் ஆயிர மாயிரமாக சம்பாதிப்பவர்கள் தங்கள் க்ஷேம நிதியை அர்பத்நாட் கொல்லம் பாங்க் போன்ற இடத்தில் ஒப்படைத்தார்களன்றி விவசாயிகளை ஆதரித்திலர். நகரத்திலுள்ள அனுவசிய ஆடம்பர வாழ்க்கையை கிராமங்களில் பரவச் செய்தவர்களும் நகர வாசிகளே.

கிராமத்தில் உண்டாகும் பொருள்களை மட்டமென இகழ்ந்து அயல்நாட்டுப் பொருள்களை ஆதரிப்பவர்களும் நகர வாசிகள் தாம். தம்மைப்போல் பெண்மணிகளும் சீர்திருந்தவில்லை என இகழ்ந்து பேசி முடிவில் மாதர்களையும் நவீன நாகரிகத்தில் வீழ்த்தியவர்களும் ஆடவர்களே யாவார். ஆடவர்கள் நாகரிகம் அவரவர்களிருந்த இடத்திலிருப்பதுபோல பெண்களின் நாகரிகம் நகரத்தில்மட்டும் இருக்காது. கிராமங்களிலும் பரவுதல் ஆச்சரியமன்று. ஸ்திரீகள் சக்திஸ்வரூபம். அது எங்கும் நிறைந்தது. அது அழிந்தால் சிருஷ்டியே கிடையாது. வாசனை சோப்புக்களென்றும் பூசும் தைலங்களென்றும் காசு பெறுத பொருள்களெல்லாம் கிராமங்களில் ஒன்றுக்கு மூன்றாக விலைப்படுகின்றன. காலணு விலையுள்ள ரிப்பனும், ஸ்லேடுகளும லக்ஷம் லக்ஷமாகச் செலவாகின்றன. போதாக்குறைக்கு ஆங்காங்கு சினிமாக் கொட்டகைகளும் முளைத்து விட்டன. மெத்த பயபக்தியுடன் அக்ரஹாரத்திலுள்ளவர்கள் முதல் குடியானத் தெரு சேரி இவைகளில் வாழ்பவர்கள் உள்பட அனைவரும் சினிமா தெய்வத்திற்குத் தலைக்கு அரை ரூபாயாவது தவறாது மாத காணிக்கை செலுத்தத் தவறுவதில்லை.

இவ்வாறு கிராம வாசிகளைத் தங்களது நவநாகரிக வாழ்க்கைக்கு ஆளாக்கிய நகர வாசிகள் கிராமப் புனருத்தாரணம்பற்றி மேடை தவருது பிரசங்க மாரி பொழிய யவும் பின்வாங்குவதில்லை. நேற்றுவரை நகர மோகத்திலாழ்ந்து வேலைக்கு உப யோகமற்ற கல்வியைக் கற்று கையிலுள்ள காசும் முகத்திலுள்ள தெளிவும் போய் தத்தளிக்கும் பட்டதாரியை அழைத்து "அப்பா! நீ கிராமம் சென்று அதைச் சீர் படுத்துவதில் ஈடுபட்டுக் காலம் கழிக்க லாமே" என்று வெகு சுலபமாகச் சொல்லி விடுகிறோம். இன்றுவரை அனுபவித்த சிற்றுண்டி ஹோட்டல்களும், அமெரிக் கன் கிராப்புச் செய்யும் ஸலூன்களும் உடனே துணிகளை வெளுத்தளிக்கும் லாண்டரிகளும், மூலைக்கு மூலை ஓலமிடும் பாட்டுப் பெட்டிகளும் கிராமத்தில் கிடைக் காதே என்று சிலர் திகைக்கின்றனர்.

பலவித அனுபவத்தாலும் நூல் ஆராய்ச் சியாலும் எளிய வாழ்வே தூயவாழ்வெனக் கருதும் இளைஞர்களுக்கும் திடீரெனக் கிராமம் செல்வதில் அதற்கேற்ற ஆதரவு சிறிதேனும் கிடைக்கவேண்டாமா? கடன்பட்டு விவசாயம் க்ஷீணித்து வரி செலுத்தவும் வழியின்றிப் பரிதபிக்கும் கிராமவாசியிடம் ஆதரவை எதிர்பார்க்க முடியுமா? கிராமம் மீண்டும் சீர்பெற வேண்டுமாயின் அரசாங்கம் சிரத்தை யெடுத்தாலன்றி மற்றவர்களால் ஒன்றும் முடியாது. கிராமங்கள் தோறும் வாசக சாலை, புத்தகசாலை, இலவசக்கல்விச்சாலை இவைகளையும் ஏற்படுத்தி இவைகள் நடை பெறுவதற்கான மூலதனத்தையும் அர சாங்கம் அளிக்க முன் வந்தால் சொற்ப வருவாயில் கிராமத் தொண்டியற்றக்கூடிய தொண்டர்கள் ஆயிரக்கணக்காய் முன் வரு வார்கள். விவசாயம் குடிசைத் தொழில் இவைகளைக் கிராமந்தோறும் நிலைபெறச் செய்தால் மட்டுமே உலகம் சுபிக்ஷமடை யும். பசுவின் வாயைக்கட்டிப் பாலை மட்டும் கறப்பதுபோல, இதுவரை கிராம வாசி களின் ரத்தத்தை உறிஞ்சிவிட்டு சென்னை யில் பானை செய்யும் விதம், பம்பாயில் பாய் நெய்தல், கராச்சியில் நூல் நூற்றல், கல்கத்தாவில் மரச்சிமிழ் செய்தல், செகந் திராபாத்தில் சாயந் தோய்த்தல்—இவை களைப்பற்றிப் பிரசாரம் செய்வதில் பயன் என்ன? தற்சமயம் சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் காட்டப்படும் பொருட் காக்ஷிகளில் ஒவ்வொன்று கிராமங்களில் காட்டப்படுமானல் அத்தொழில் அபி விருத்தியடைய வழியுண்டு. நகரவாசிகள் ஆயிரக்கணக்காகப் பொருட்காக்ஷியைக் காணவந்தாலும் முடிவில் பலர் "என்ன இருந்தாலும் ஹண்டிலி பால்மர் பிஸ்கட் டைப் போல் கேழ்வரகு பிஸ்கட் ருசியா யில்லை. கதர் நன்ருய்த் தானிருக் கிறது, ஆனல் இன்னும் இம்புருவ் ஆகவேண்டும். கழுத்து வலிக்க இடிப் பொடிய இச்சிறு தொழில்களைச் செய்வ தில் பெருமித லாபமேது?" என்று பேசிப்போகும் காரணமென்ன? கண் ணுல் பார்ப்பவர்களைக் காட்டிலும் கையால் செய்பவர்களுக்கே பொருட் காக்ஷிகள் உபயோகப்படு மென்பதில் சந்தேகமில்லை. கிராமப் பொருட் காக்ஷி கள், கிராமச் சுகாதார சங்கம், கிராம க்ஷேமாபிவிருத்தி சங்கம், கிராமக் கல்விச்சாலை இவைகளைப் பரவச் செய்தும் ஏற்கனவே உள்ளவைகளைத் தட்டி எழுப்பியும் வேலை செய்யாத வரையில் தேசப்பஞ்சம், தீராக்கடன், தெளியா நோய் இவை நம்மை விட்டு நீங்க வழியே இல்லை. கிராமப் புனருத்தாரணமே நகரத்தின் ஜீவாதாரமென அறியாமல் "யான் பெற்ற இன்பம் எவரும் பெருக!" என்ற முறையில் நகரவாசி கள் கிராமவாசிகளிடம் அனுதாபப் படுவதைக் காட்டிலும் மௌனமாயிருந் தால் மிகவும் நன்ருயிருக்கும்.

ராப்பயணம்

(ரஸிகன்)

செல்லப்பன் அத்தை நெருங்கின பந்துக்கள் வீட்டில் துக்கத்துக்குப் போக வேண்டியிருந்தது. ரயில் பிரயாணமானதால் துணை அவசியம். வேறு பெரியவர்கள் ஒருவரும் வரத் தோதுப்படாததால் செல்லப்பனையே அழைத்துச் சென்றாள். 13 வயதான அவனுக்கு இதில் ஒரு புது அந்தஸ்து ஏற்பட்டதாகவே தோன்றிற்று. அவன் சுபாவத்தில் அழுகைக் குரல் காதில்பட்டால் நடுங்குபவன். செத்த வீடு இருக்கும் தெரு வழியாகவே செல்லமாட்டான். அப்படியிருந்தும் தன்னைப் பெரிய மனுஷனாக நினைத்துத் துணையாக வர தன் அத்தை கூப்பிடும்போது அவனுக்கு அதைத் தட்ட மனமில்லை.

மாலை 6 மணிக்கு அரந்தாங்கி போகும் ரயில் பாதையில் ஒரு சிறிய ஸ்டேஷனில் போய் இறங்கினார்கள். அங்கிருந்து அவர்கள் போக வேண்டிய ஊர் ஏழு மைல் என்றும், அதில் ஐந்து மைலுக்குத்தான் வண்டிச் சுவடு உண்டு, பாக்கி 2 மைல் நடந்துதான் போகவேணு மென்றும் தெரிந்தது. முன்னிருட்டு நாள். சுப்பம்மாள் பயந்தவள். இரட்டை மாட்டு வண்டிக்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு 'நான் கொணாந்து விடரேம்மா, இதோத் தான் இருக்கு. இந்த வழியில்லாம் ஒரு பயமுமில்லே. இன்னம் நாலு நாழி போனா நிலா பட்டப்பகலாட்டமா எரைக்கும்' என்றெல்லாம் சொல்லியும் அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவர்களைப் பார்த்தாலே முரட்டுப் பயல்கள், சந்தேகத்திற்கிடமாயிருந்தது. ஒருவன் மட்டும் சற்று வயதானவன். யோக்கியன்போல் தோன்றிற்று. அவன் ரயிலடிக்குச் சமீபத்திலுள்ள சத்திரத்தில் தங்கி, விடிய ஐந்தாறு நாழிகைப் போதுக்குக் கிளம்பினால் பலபல வென்று உதயத்துக்குப் போய் விடலாமென்று சொன்னான். அது உசிதமாய்ப்படவே, அவனை அமர்த்தி, சத்திரம் சேர்ந்தார்கள். வண்டியை அவன் தெருவில் அவிழ்த்துப் போட்டான். செல்லப்பனுக்கு ஓரணாவுக்கு அத்தை சத்திரத்திலிருந்த 'தண்ணிப் பந்தலில்' வடை வாங்கிக் கொடுத்தாள். பட்டண வாஸத்துத் திருட்டுத்தனமெல்லாம் தெரியாத அந்தக் கடை அம்மையார், அந்தக் காசுக்குப் பத்து வடை கொடுத்தது மில்லாமல் இரண்டு வாழைப் பழமும் மோர்த் தண்ணியும் கொடுத்து அதெல்லாவற்றையும் செல்லப்பன் சாப்பிடும்படி வற்புறுத்தினாள்.

சற்றுப் படுத்துக் கண் அயர்ந்தார்கள். 'அம்மா, அம்மா' என்று வண்டிக்காரன் கூப்பிட்டான். சுப்பம்மாள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தாள். மறுநாள் காலை பத்து மணி ரயிலுக்கே ஊருக்குத் திரும்ப வேண்டியிருந்ததால் நாழியாய் விடப் போகிறதே என்ற பயத்தில் பொழுதைக்கூட செவ்வையாய்க் கவனிக்காமல் செல்லப்பனைத் தட்டி எழுப்பி இருவரும் வண்டியில் ஏறினார்கள். வண்டி மெதுவாக நகர்ந்தது. ஊர் முழுவதும் உறங்கும் அத்தருணத்தில் மாட்டு மணியோசை தவிர எவ்வித சப்தமும் இல்லை. தெருவில் படுத்திருக்கும் நாய்களும் ஆட்டுக்குட்டிகளும் கூட தூங்கினாற் போலிருந்தது. பட்டப்பகல்போல நிலவு; பேனா முனையால் தீட்டப்பட்டது போல் தெளிவாயும், கறுப்பாயும் திண்ணை தாழ்வாரங்களின் நிழல் தெருவில் துலங்கிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் ஊரைத் தாண்டி வயல் பாதையை அடைந்தார்கள். செல்லப்பனுக்குக் கொஞ்சம்நெஞ்சம் இருந்த தூக்கக் கலக்கமும் தெளிந்து விட்டது. வண்டியின் பின்புறம் உட்கார்ந்த அவனுக்கு, முன்பின் பாராத ஒரு புது உலகில் நழுவி விழுந்தாற்போல், எங்கும் நிலவொளி நிறைந்த அந்த சமுத்திரம் போன்ற அகண்ட வெளி அவன் உள்ளத்தைக் குலுக்கி ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று. வண்டிச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு இறை தேடுவதை விட்டு வங்குகளுக்குள் பாயும் எலி முதலான சிறு ஜந்துக்கள் கட்டைத் தாளில் உறையும் சலசலப்பு மேளக் கச்

சேரியில் ஒத்தூதுவது போல் காதில் ஒரு பக்கம் விழுந்து கொண்டேயிருந்தது. வெண் அலை மோதும் அந்தக் கடலில் வரப்புகளும் அவைகளில் அரசப்பிரசலாயுள்ள கருவேல் மரங்களும் அங்கங்கே காணப்படும் நெற்களங்களுமே தீவுகள் போல் நின்றன. களங்களில் நிழலுக்காகப் பயிராக்கப்பட்டிருக்கும் ஆல மரங்களின் அகண்ட இலைகள் வெள்ளித் தகடுகள் போலவும், அவைகளைத் தாங்கி நின்ற மரங்கள் பட்டுச் சீலை கட்டின தேர்கள் போலவும், எட்ட அரக்கர்போல் நிற்கும் பனைகளில் இளங்காற்று ஊடுருவிச் செல்வதால் உண்டாகும் தொனி ஆயிரக் கணக்கான ஜனங்கள் அரை மைலுக்கப்பால் செய்யும் கரகோஷம் போலவும் செல்லப்பன் மனதுக்குப் பட்டன. அந்த சாந்தம் நிறம்பிய அழகில் அவன் மூழ்கி மயங்கினான். சுப்பம்மாளோ வண்டிக்குள் படுத்துத் தலையை மூடி முக்காடிட்டுக் கொண்டு 'ஏண்டா, இன்னும் ஊர் எத்தனை மைலிருக்கு'மென்றும், 'இந்த அடுமாண்டு போரவனுக்கு நாழி போது தெரியல்லெப் போலேருக்கு, நடுநிசியாட்டமாயிருக்கே', என்றும், 'ஈசுவரா, ஊருக்கு ஜாக்கிரதையாய்ப் போய்ச் சேரணுமே' என்றும் பலவிதமாய்ப் புலம்புவதும், இடுக்கே நீண்ட குறட்டை விடுவதுமாகவேயிருந்தாள்.

இப்படிக் கொஞ்சதூரம் போனதும் வண்டி தண் வரண்ட ஒரு வாய்க்காலில் இறங்கி அதன் வழியே செல்ல ஆரம்பித்தது. புதை மணல். வண்டிக் கால்கள் அதில் அழுந்த மாடுகள் வெகு சிரமப்பட்டு மெதுவாய் இழுத்துச் சென்றன. அந்தத் தொந்தி மணலில் உறையும் கால்களிலிருந்து தாய் குழந்தையைத் தாலாட்டுவது போன்ற ஓர் இனிய ஓசை கிளம்பி செல்லப்பனுக்கு ஒரு புது உணர்ச்சி தந்தது. ஆனால் வாய்க்கால் அகலக் குறைவாயும் இரண்டு புறமும் நாணலும் நொச்சியும் அடர்ந்திருந்ததால் அவனுக்கு உள்ளூரச் சற்று அச்சம் தான். கொஞ்சம் வண்டியின் உட்புறம் நகர்ந்தான். காற்றில் ஆடும் நாணல் தோகைகள் அவனுக்குப் பூச்சாண்டி காட்டுவதுபோல் இருந்தது. திடீரென்று இங்கொரு மடாத் தவளை ஆத்திரமாய்க் கொக்கரிக்கும். அங்கொரு சாரைக் கடாவில்லிலிருந்து அம்பு கிளம்பினாற்போல் ஒருபுறமிருந்து இன்னொருபுரம் தாண்டும் கண்ணில் படாத அநேக ஜந்துக்கள் பயந்து குசு குசுவென்று பேசிக்கொள்வது போல் குழம்பின ஒலி வண்டியோடுகூட வந்துகொண்டேயிருந்தது. அடிக்கடி வாய்க்கால் வளைந்து வழிமாறிச் செல்வதால் வண்டி திரும்பும்போதெல்லாம் செல்லப்பனுக்கு ஈரல் தொண்டைக்கு வந்து விட்டாப்போல் தூக்கிப் போடும்.

இப்படி வெகு நேரம் சென்ற பிறகு மரமடர்ந்த ஒரு தோப்பில் பாதை புகுந்தது. சந்திரகிரணங்கள் திட்டுத் திட்டாக இங்கு மங்கும் இலைகள் நடுவே எட்டிப் பார்த்தன. அவை அந்த இருளை மாற்ற முடியாமல் அதைச் செல்லப்பனுக்கு எடுத்து விளக்கின வென்றே சொல்லலாம். சாதாரணமாகவே அவன் இருட்டைக் கண்டால் பயமுறுவான். இரவில் சாப்பிட்டுக் கை அலம்பத் துணையில்லாமல் இரண்டாங் கட்டுக்குப் போகமாட்டான். காற்றில் இலைகள் அசையும்போதெல்லாம் சீர்குலைந்து சிதரும் நிலவுத் திட்டுகளையும் அவைகளை விழுங்கும் இருட்டையும் கண்ட அவனுக்கு அந்த இருட்டே உயிர்ப்பட்டு அவனைத் துரத்துவதுபோலிருந்தது. மரத்துக்கு மரம் ஆளிருப்பது போலும், தன் கண்ணில் படாமல் ஒளிந்து தன்மேல் பாய சமயத்தை எதிர்பார்த்து நிற்பதுபோலும் அவனுக்கு ஒரு பீதி உண்டாயிற்று. கண்ணை இறுக மூடிக்கொண்டான். அது சமயம் பார்த்து தலைக்குமேல் ஆந்தை கிளைகூட்ட ஆரம்பிக்கவே அவன் நடுநடுங்கினான். அந்தப் படபடப்பு அடங்குவதற்குள், சாகுருவியின் நீண்ட சோகக் குரல் அவன் அடிவயிற்றைக் கலக்கிற்று. அந்தத் தோப்பில் ஒரு குட்டை. அதன் அருகே வண்டி செல்லும்போது கரையில் வந்து படுத்திருந்த நீர்ப் பிராணிகள் 'பொத்'தென்று குதிக்கும் சத்தம் ஒரு புறம், காற்றால் ஆட்டப்பட்ட காய்ந்த இலைகள் பிண்டு தண்ணீரில் விழும் ஓசை ஒரு புறம், நீரருந்த வந்த நரிகள் ஓட்டோட்டமாய் ஓடி எட்ட நின்று வீரிடும் கடுங் கூச்சல் ஒரு புறம், எல்லாம் ஒருங்கே வர, செல்லப்பன் பயங்கரமான சொப்பனம்

கண்டவன்போல் பதறினன். அந்தத் தோப்பு வழி வண்டி சென்றது 10 நிமிஷமிருக்கலாம், அவனுக்கு அது பத்து யுகம்போல் இருந்தது.

வெளியே வந்ததும் கூப்பிடுதூரத்தில் ஒரு கூரைக் கட்டிடம் கண்ணில் பட்டது. அதன் எதிர்ப்புரத்தில் நாலைந்து வண்டிகள் அவிழ்த்துக் கிடந்ததைக் கண்ட பிறகு தான் செல்லப்பனுக்கு நல்ல உயிர்வந்தது. வண்டிக்காரக் கிழவன் தன் வண்டியையும் அங்கே கொண்டுவந்து நிறுத்தினன். மூன்று சாலை சேரும் அந்த இடத்திலுள்ள கட்டிடம் ஒரு சத்திரம். அகால வேளையில் வழிப்போக்கர் வந்தால் தங்குவதற்காக வென்றே சமீபத்திலுள்ள ஒரு தனவந்தரால் கட்டப்பட்டது. நம்மவர்கள் போக வேண்டிய ஊருக்கு வண்டிப்பாதை அதோடு நின்று விட்டபடியால் கிழவன் இவர்களைச் சத்திரத்துத் திண்ணையில் நாலு நாழி படுத்துப் போகலாமென்று சொன்னன். தானும் துணையிருப்பதாகவும் கூறினன். அவர்கள் மடிசஞ்சியை எடுத்துக்கொண்டு குறட்டை ஏறும் சமயத்தில் அதுவரை தூங்கிக் கொண்டிருந்த இன்னொரு வண்டிக்காரன் விழித்துக் கொண்டு "அம்மா, அம்மா, அங்கே போகாதீங்க, யாரோ ஒரு பாவி அந்தக் கூடத்து உத்தரத்திலே தூக்குப் போட்டுக் கிட்டுக்கடக்கான். 'ஹெட்டு' வந்திருக்காரு, ராத்திரில்லாம் அமுளி துமுளி" என்றுன். சுப்பம்மாள் நடுநடுங்கிப் போனுள். வண்டிக்காரக் கிழவனை வண்டியைப் போட்டு விட்டு தங்களோடு வந்து வழி காட்டினல் துக்கத்துக்குப் போகும் ஊரில் தங்காமல் உடனே திரும்பி வந்து விடலாமென்று கெஞ்சவே, அவனும் ஒப்புக்கொண்டான். மெதுவாய் அந்த ஊர் போய்ச் சேர்ந்தார்கள். தான்பட்டபாட்டில் செல்லப்பனுக்கு செத்த வீட்டு அழுகைக்குரல்கூட காதுக்குக் கொஞ்சம் இனிமையாகவே யிருந்தது. சுப்பம்மாளுக்கோ அன்று இரவு சம்பவங்கள் ஆறுமாத வம்புக்குப் போதுமான விஷயதானம் செய்தன.

தொழில் அபிவிருத்தித் திட்டக் கமிட்டி

கமிட்டி தீர்க்கவேண்டிய பிரச்னையானது தேசத்து நிலையின் எல்லா அம்சங்களையும் அளாவி நிற்கிறது; அதாவது பொதுவாக தேசமக்களின் வாழ்க்கை நிலைமையை சரிப்படுத்தி உயர்த்துவது, ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்குள் தற்போதைய நிலைமையைக் காட்டிலும் இரண்டு மடங்கு வசதி அதிகமாகச் செய்வது. நமது பொருளாதாரப் பிரச்னை வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்பதுகூட அவ்வளவு அல்ல என்பது நமது அபிப்பிராயம். நமது பொருளாதார நிலை அபிவிருத்தியாவதற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் பிரதிபந்தகங்களை அகற்ற வேண்டும்; காரண காரியங்கள் என்ற துவந்துவத்திலேயே அகலாமல் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கும் பொருளாதாரவிதிகள், அபிவிருத்தி சக்திகளை தடைகள் போட்டு அமுக்கிக்கொண்டிருக்கும் அதிகார இயந்திரம் இவற்றை அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் உண்மையாக கதி மோட்சமுண்டு. தொழில் அபிவிருத்தி திட்டக் கமிட்டி விடுத்துள்ள கேள்வித்தொகுதியின் குறைந்த நோக்கத்தையே எடுத்துக் கொண்டாலும் (மக்களின் வாழ்க்கை நிலையை இரட்டிப்பு வசதிகொண்டதாகச் செய்வது) பெரிய தொழில்களைக் காட்டிலும் கைத்தொழில்களையும் இதர சில்லறைத் தொழில்களையும் சீர்திருத்தி அபிவிருத்தி செய்ய வேண்டியதுதான் அவசியம். பொதுமக்களின் பெருவாரியான பகுதிக்கு அவற்றில் தான் ஜீவனேபாயமும் வேலை செய்யும் சக்தியும் வசதியும் இருக்கின்றன. விவசாய முறைகள், நீர்ப்பாசன வசதிகள், கடன் வசதிகள், விற்பனை வசதிகள், உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரம், உதவித் தொழில்கள், குடிசைத் தொழில்கள்—இவைதான் முக்கியமாக, (எவ்வளவு ஸ்வாரஸ்யமில்லையென்றாலும்) கமிட்டி ஆராய்ச்சி செய்ய வேண்டியவைகள். இவற்றில் தான், இவை சம்பந்தமான சர்க்கார் இலாகாக்களில்கூட, சரியான விவரங்களும் புள்ளிகளும் கிடையாது; அவற்றை எப்படி சேகரிப்பதென்பதுகூட இந்த இலாகாக்களுக்குத் தெரியாது.

—இந்தியன் பினான்ஸ்.

என் சிறு கதை

(ஸ்ரீ. ஸு. சேதுராமன்)

'ஸார்' எப்பொழுது வந்தாரோ, எனக்குத் தெரியாது. குறைந்தது அரை மணிக்கு முன்னுடியே வந்திருக்க வேண்டும். ஆனல் அத்தனை நேரமும் அமுக்குப் பிள்ளையாரைப் போல என் முதுகுப்புறம் நின்று கொண்டு நான் எழுதுவதை எல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தார்!

முக்கால்வாசிக் கதையும் எழுதிவிட்டேன். திடீரென்று 'ஸார்' என் முதுகைக் குலுக்கி, "என்னடா, பெரிய மனுஷனுகப் போயிட்டே... கதை அளந்துகொண்டேயிருந்தால் ஹோட்டல் சாப்பாடு காத்துக் கொண்டே யிருக்குமோ?" என்று ஒரு சின்ன கர்ஜனை செய்தார். ஆர்செஸ்ட்ரா என்று சொல்லிக் கொள்ளுகிறர்களே, அதுபோல ஒரே சமயத்தில் பலஸ்வரங்கள் சேர்ந்தாற்போல் இருக்கும் அவருடைய 'இழைந்த' குரல். வார்த்தையோடு வார்த்தையாய்ச் சொல்லி விடுகிறேன். இந்தக் குரலுடன், அப்பழுக்கற்றது என்று அவர் பெருமைப்பட்டு, 'பாணி'யில் பாடவும் ஆரம்பித்து விடுவார்!

"என்ன, சிறு கதையா, சிறு கதை? ஐயோ! இப்படியும் புத்தி கெட்டுப் போகுமா உனக்கு?...ஊரை வளைத்து எதையாவது கிறுக்குவது...கேட்கப் போனல் 'சிறு கதை' என்று 'அடித்து' விடுகிறாய்! அதிலே மோகித்துக் கிடப்பனு ஒருத்தன்!"

"உமக்குத் தெரியுமாங்காணும் கஸ்தூரியின் வாசனை! கதை எழுதுவது என்றால் ஆத்துக்காரிக்கு எழுதுவது மாதிரி அவ்வளவு எளிசு என்று நினைச்சூட்டாப்பலே இருக்கே... ஆமாம்! இந்த மாதிரியும் ஒரு பிறவி இருக்குமா?...உம்மை ம்யூஸியத்திலே வைக்கணுங்கணும்..." என்று பதில் சொன்னேன்.

"ரொம்ப பிரகஸ்பதியாய்ப் பேசுகிறயே. எந்தக் கதையை வேண்டுமானுலும் எடு! அது தம்பிடி பொறுது என்று ரூபிக்கிறேன்" என்று சண்டை பிடிப்பவர் போலக் கோபத் துவனியுடன் சொன்னர்.

அன்று லீவு நாள். தூக்கமும் வரவில்லை. பொழுதுபோக வேண்டுமே என்று, தெரியாத்தனமாக ஒப்புக் கொண்டு விட்டேன்.

நல்ல வேளையாக அவரும் நானும் மூன்றுவது மாடியில் ரூம் வைத்துக் கொண்டிருந்தோம். எதைப்பற்றிப் பேச வேண்டுமானுலும் நிர்ப்பயமாகப் பேசலாம். ஆகையால் நான் எழுதிவந்த கதையைக்கூட முடிக்காமல், சாப்பிட்டுவிட்டுப் பேச உட்கார்ந்துவிட வேண்டியதாயிற்று. அவர் தான் லேசில் விடமாட்டாரே!

* * *

"நீயே கதையைப் படித்துக் காண்பி. அப்புறம் நான் பாயிண்டு பாயிண்டாக எடுத்துச் சொல்லுகிறேன்" என்றார். சரியென்று நானும் படிக்க ஆரம்பித்தேன்.

"கொஞ்சம் நினைவு வந்து கண்களைத் திறந்தான். சாளரத்தின் வழியே இருண்ட ஆகாசத்தில் அடர்த்தியாகக் கருமேகங்கள் குவிந்து தொங்குவது தெரிந்தது......"

"இரு...இரு! என்னடா நீயும் உன் பாஷையும்! அடர்த்தியாம், அப்புறம் குவிந்து கொண்டனவாம்...தொங்கிற்று...! எந்த கோட் ஸ்டாண்டிலேடா?...அதெல்லாம் 'என்னப்பன்' கண்ணுக்குத் தெரிந்ததாம்!...என்ன வேண்டிக் கிடக்கு வர்ணிப்பு?...சரி சரி, மேலேபடி" என்று முனகினர்.

"சற்று நேரத்தில் இடியும் மின்னலும், மின்னலொளியில் மரங்களெல்லாம் பைசாசம் போல் ஆடுவதும், பூமியில் சாய்ந்து விழுவதும் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தன. பேயின் உறுமலைப் போலக் காதைத் துளைத்தது புயலின் அரவம்..."

"சகிக்க வில்லையே! விஷயத்தைச் சொல்லியாச்சு. பிரமாதமாக மழை பெய்தது என்று இலகுவில் சொல்லுவதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்...?"

"அப்போது பதினைந்து நாழிகை இருக்கும். ஸுல்தான் பீகம் வந்தாள். சவம்போல உணர்ச்சியற்றுக் கிடந்த அவனுக்குத் திடீரென்று என்ன உதயமாயிற்றோ என்னவோ, முகத்தில் சிறிது தைரியக் களை ஏற்பட்டது, அவள் கொண்டு வந்திருந்த ஆகாரத்தை வாங்கிச் சாப்பிட்டான். அவள் விழிகளைச் சுழற்றி ஏக்கத்துடன் அவனது எலும்பெடுத்துப் போன உடம்பைப் பார்த்தாள். ஆனால் வெளிக் காட்டிக் கொள்ள முடியவில்லை..."

"நிறுத்திக்கோ!...யாரு, என்ன சமாசாரம் என்ற விபரத்தைக் காணோம். என்னமோ புதிர் போடுவதுபோல 'அவன்' என்றால்! யாரு? உங்கள் சித்தப்பனா?" என்று சீட்டாட்டத்தில் ஜெயித்து விட்டவர் மாதிரி கர்வத்துடன் என்னை ஒரு தடவை பார்த்தார். நான் மட்டும் படித்துக் கொண்டே போனேன்.

"பீகம் கொண்டு வந்திருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டான். பிறகு என்றும் இல்லாத வழக்கமாக அவளை நிறுத்திச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

* * *

பீமா நதிக்கரை யோரமாகத் தான் இருந்தது ராமன் சிறைப்பட்டிருந்த அரண்மனை. அதன் வெளிச் சுவரில் நதியின் வெள்ளம் அரண்ய கன்னியைப் போல உறுய்ந்து கொண்டே செல்லும்..."

"என்னடா சம்பந்தா சம்பந்தம் இல்லாமே போகிறதே! நன்னா இருக்கு நீ கதை எழுதும் அழகு! என்னமோ அவன், பீகம், என்று சொன்னாய்...இப்போ வேறெ எதோ ஆரம்பிச்சுட்டியே!...முந்தின வரிக்கும் அடுத்த வரிக்கும் நடுவில் புள்ளி போட்டிருக்கிறாய்...கிருஹசாரம், இப்படியா புத்திகெட்டு அலையணும்!..."

"ராமன் சிறைப்பட்டிருந்தது ஆறுவது அடுக்கில். ஒரு காலத்தில் சுல்தானும் பீகமும் சயனகிருஹமாக உபயோகித்து வந்த இடம். அது மிகவும் இரகசியமான அறை. அங்கே யாரும், அந்தப்புரக் கட்டழகிகள் கூட, வர அநுமதிக்கப் படுவதில்லை.

அன்று பிரமாதமான மழை பெய்ததால், ஜலத்தை அணைக்க முடியாமல் அணைத்துக் கொண்டு பீமா கரை புரண்டு பிரவஹித்தாள். கருமேகத்தையும் பிளந்து கொண்டு வீசும் மின்னல் வெளிச்சத்தில் சாளரத்தின் வழியே பார்வையைச் சுழற்றி ஏதோ வேலை செய்து கொண்டிருந்தது ராமனுடைய மூளை...குளிர் நடுக்கித் தள்ளியது..."

"அட இழவே! மறுபடியும் வர்ணனை வந்து விட்டதா?..." என்று முனகிக் கொண்டே தலையில் ஒரு தடவை லேசாக அடித்துக் கொண்டார் 'ஸார், நான் தான் என்ன செய்வது? கதையின் போக்கு அப்படி இருந்தது. கொஞ்ச தூரம் தொடர்ந்து படித்துக்கொண்டு போனேன். பிறகு மறுபடியும் 'அபாயமான இடம்'—இல்லை—வர்ணனை, வந்து விட்டது.

"நாழிகை ஆக ஆக மழையின் உக்ரமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அந்தப் பைசாச வேளையில் 'ஹோ' என்று காற்று வீறிட்டு அலறியது..."

"போதுமே! நிறுத்திக் கொள்ளப்பா உன் ஸுப்ர தீபமான கதையை!... "நீ ரொம்பப் புத்திசாலி என்று மனசுக்குள்ளே நினைச்சுண்டிருக்கே...'வானமும் வையமும் இருண்டு, கிடுகிடாய்த்துக் குமுறின. மரங்கள் எல்லாம் பேய்போல் ஆடின....' என்று ஏதாவது அர்த்தமே இல்லாதபடி நாலு வார்த்தைகளைப் பிணைத்துப் போட்டுப்பக்கம் பக்கமாக எழுதி தள்ளுவது...இது தாண்டா சிறு கதை என்பது...அதைப் படிக்கிறதற்கும் நீ தான் லாயக்கு...போடா, நீயும் உன் சிறு கதையும் எப்படி வேணுலும் கட்டிக் கொண்டு அழுங்கள், அல்லது கொஞ்சிக் குலாவுங்கோ!..." என்று சொல்லிவிட்டு துண்டை உதறி மேலே போட்டுக் கொண்டு கிளம்பி விட்டார்.

கீழே, இரண்டாவது மாடியிலிருந்து "எலே சங்குரு, என் பொடி டப்பியைக் காணும், எங்கேயாவது நீ கண்டியா?" என்ற அந்த 'இழைந்த' குரலின் திவ்விய நாதம் என் காதில் விழுந்தது.

அவர் ஆராய்ச்சியால் சிதைவுண்ட என் சிறுகதை என் முன் பரிதாபகரமாகக் கிடந்தது.

புரட்சி

(ஸ்ரீமதி. எஸ். நாமகிரி)

தன் தோழி ஒருவாரமாய் தன் வீட்டுக்கு வராததால் வீட்டு வேலைகளையெல்லாம் அதி சீக்கிரமாய் முடித்துக்கொண்டு, "அடேய் தம்பி! நான் ஞானத்தின் வீட்டிற்குப் போய்விட்டு சீக்கிரமாய் வந்துவிடுகிறேன். பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகள் வருவார்கள். வந்ததும் தூக்குக் கூடையிலிருக்கும் தின்பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்து உண்பித்து வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டு கொத்துச் சாவியை இடுப்பில் சொருகிக்கொண்டு, ஞானத்தின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள் ஸரோஜா.

தோழியைப் பார்க்கப்போகும் அவசரத்தில் எதிரில் வருவோரைக்கூட இன்னாரென்று கவனியாமல் போய்க்கொண்டிருந்தாள். அப்போது அவளை சந்தித்த பார்வதி "என்ன ஸரோஜா, இவ்வளவு வேகமாகச் செல்கிருயே? என்னை ஞாபகமில்லைப்போ விருக்கிறது!" என்ருள்.

"பார்வதி! ஞாபகமில்லாமலில்லை. அவசரமாய் ஓர் காரியமாகப் போவதினால் கவனிக்காமலிருந்துவிட்டேன்" என்று பதிலை எதிர்பாராமல் ஞானத்தின் வீட்டுக்குள் சென்ருள். கையில் பலமான கட்டுடன் கயிற்றுக் கட்டிலின்மேல் தலையணையில் கையை வைத்தணைத்துக்கொண்டு அனத்திக்கொண்டே படுத்திருந்தாள் ஞானம். ஞானத்தைக்கண்ட ஸரோஜா மிகவும் திகிலடைந்து "ஞானம், கையிலென்ன? பலத்த கட்டுப்போட்டுக்கொண்டிருக்கிருயே—சிரங்கு ஏதாயினும் வந்திருக்கிறதா?" என்ருள்.

"யார், ஸரோஜாவா? வா உட்கார்" என்ருள் ஞானம். ஸரோஜா ஞானத்தின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு "ஞானம், கைமுழுவதும் வீக்கமாயிருக்கிறதே. ஆஸ்பத்திரிக்குப்போய் காட்டி வந்தாயா? எனக்குச் சொல்லியனுப்பி யிருக்கக் கூடாதா?" என்று மிகவும் பரிவுடன் கேட்டாள்.

"ஸரோஜா! என் கஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்? பாபிக்கு சதாயுஸ் என்பதைப்போல் என் ஆயுளானது நீடித்து நிற்கிறது" என்று விக்கி விக்கி அழுதுகொண்டு துக்கம் தொண்டையை அடைக்க மிகவும் கஷ்டத்துடன் மேல் சொல்லத் தொடங்கினுள்.

"இவர் எட்டுநாட்களாக வீட்டிற்கே வருவதில்லை. கொஞ்சம் அரிசியிருந்தது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு நாளாகச் சாதம்செய்து குழந்தைகளுக்கு போட்டுக் கொண்டிருந்தேன். இன்றுடன் அதுவும் தீர்ந்துபோய்விட்டது. காலையில் எதிர்வீட்டில் ஒரு அணு கடன்வாங்கிக் கடையில் இட்டிலி வாங்கிக்கொடுத்துச்சாப்பிடச்சொல்லி பள்ளிக்கூடத்திற்கு அனுப்பித்து சாயங்காலமே வீட்டுக்கு வரும்படியாயும் மத்தியானம் வரவேண்டாமென்றும் சொல்லி யனுப்பித்து விட்டேன். இப்பொழுது பள்ளிக்கூடத்திலிருந்து வந்து மிகவும் பசியாயிருப்பதாய் அழுதார்கள். இப்பொழுதுதான் உன்னுடைய வீட்டிற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு எனக்கு உடம்பு சௌக்யமில்லையென்று உன்னை அழைத்து வரும்படியாயும் சொல்லி அவர்களை அனுப்பித்தேன்."

"ஞானம், நான் விரைவில் போய் குழந்தைகளுக்குச் சாதம் போட்டு அனுப்புகிறேன். கையில் உனக்கு என்ன வாயிற்று என்பதை முதலில் சொல்லு."

"உன்னிடம் எனக்கு ஒளி மறைவென்ன? என் கதை முழுவதும் உனக்குத் தெரிந்த விஷயம். சண்டையோ சச்சரவோ, அடியோ, உதையோ எல்லாம் நடந்துகொண்டிருந்தாலும் வீட்டிற்காவது வந்து கொண்டிருந்தார். இப்பொழுது ஒரு வாரமாய் விட்டது வீட்டிற்கு வந்து. எங்கு சாப்பிடுகிருரோ எங்கு இரவு தங்குகிருரோ ஒன்றும் தெரியவில்லை. ஆதலால்

என் மனம் தாளாமல் அவருடைய ஆபீஸில் போய் க்ஷேம சமாசாரம் தெரிந்து வரும்படி குழந்தைகளையனுப்பித்திருந்தேன். குழந்தைகள் ஆபீஸில் நுழைந்தவுடன் இங்கு ஏன் வந்தீர்கள் என்று விரட்டி யனுப்பித்துவிட்டார். போன மாதத்தில் 4 நாள் ஆபீஸ் செல்லவில்லை. நான் 'என் ஆபீஸுக்குப் போகவில்லை, தேக அசௌக்கியமா, அல்லது லீவ் வாங்கிக்கொண்டிருக்கிறீர்களா ?' என்று கேட்டேன். அதற்கவர் 'நான் ஆபீஸுக்குப் போனால் உனக்கு என்ன ? போகாவிடில் உனக்கென்ன ?' என்று கோபமாகப் பதில் சொன்னார். அதற்கு நான் 'எனக்கு இல்லாமல் பின் யாருக்கு உரிமை, உங்களுடைய சுக துக்கமெல்லாம் மனைவிக்கேயல்லவா? மறைக்காமல் என்னிடம் சொல்லுங்கள்' என்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதின்பேரில் தன்னை ஆபீஸில் வேலைக்கு உதவாதவனென்றும் இனி ஆபீஸிற்கு வரவேண்டியதில்லையென்றும் சொல்லிவிட்டதாகச் சொன்னார். அந்தப் பேச்சைக் கேட்டவுடன் இடி முழக்கங் கேட்ட நாகம்போல் ஆகிவிட்டேன். ஆனாலும் என்னைச் சமாளித்துக்கொண்டு மானேஜர் வீட்டுக்குச் சென்று அவருடைய காலில் விழுந்தேன். அதற்கவர் 'ஞானம்! உன் புருஷன் மிகவும் கெட்டவன். நன்றாய் குடித்துவிட்டு வேலைகளைச் சரிவரக் கவனிக்கமாட்டேனென்கிறான். உனக்காகவும், உன் தகப்பனாரின் நேசத்திற்காகவும் இத்தனை நாள் பொறுத்து இருந்தேன். இனிப் பொறுக்க முடியாது. நான் பொறுமையாயிருந்தாலுங்கூட அவனுடன்கூட வேலை செய்பவர்கள் பொறுக்கமாட்டேனென்கிறார்கள். இனியவன் வேலை பார்க்க போக்யமில்லை. நீ தான் அந்தப் பாவியைக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிறாய். எங்களுக்கென்ன? மகா துஷ்டன். உனக்காக இந்த ஒரு தடவையும் பொறுத்துக் கொள்கிறேன். கள்ளைக் குடிக்காமல் ஆபீஸிற்கு வரச்சொல்' என்றார்.

வீட்டிற்கு வந்து இவரிடம் மிகவும் கெஞ்சி ஆபீஸிற்குப் போகும்படி வற்புறுத்தினேன். அதன் மேல் ஆபீஸ் போய் வந்துகொண்டிருந்தார். போன மாதம் 15ம் தேதியன்று கள்ளை ஏராளமாய்க்குடித்துவிட்டு ஒரு பெரியமனுஷரை வாயில் வந்தபடி திட்டிவிட்டதினால் அவர் போலீஸில் எழுதி வைத்துவிட்டார். எனக்கு விஷயம் தெரிய வந்ததும், எங்கே கேஸ் வலுத்துவிடுமோவென்று என் கழுத்துச் சங்கிலியை அடகு வைத்து போலீஸாரைத் திருப்தி செய்வித்து இவரை வீட்டுக்கு அழைத்துவந்தேன். நானும் ஆயிரம் ரூபாய் வரையில் நகைகள் போட்டுக்கொண்டிருந்தேன். எல்லாம் கள் குடிக்கச் செலவழிந்துவிட்டது. கையில் ஒருவளை பாக்கியிருந்தது. அதையும்கொடு வென்றார். நான் மாட்டேனென்றதில் என் பேரில் புலிபோல் பாய்ந்து கைக்காப்பைக் கழற்றிக்கொண்டு அத்துடன் விடாமல் என்னையும் அடித்தார். அதுதான் கையில் காயம். அதனால் கை முழுவதும் வீங்கி விட்டது. என்ன கஷ்டப்பட்டாலும் உயிர் வெல்லமாயிருக்கிறது. என் சிறிய தகப்பனாரின் பிள்ளை இவ்வூரில் கம்பவுண்டராய் இருக்கிறான். அவனை அழைத்து வரச் சொல்லி கைக்கு வைத்தியம் செய்து கொள்கிறேன். ஆனால் நான் முந்தின ஜன்மத்தில் என்ன செய்திருக்கிறேனோ, அவைகளை அனுபவித்துத் தானே ஆகவேண்டும். பிறந்த வீட்டுக்குச் சென்று வரலாமென்றால் இவருடைய உத்திரவு நல்ல நாளிலேயே கிடையாது. அங்கு போனதினால் இவருடைய தரிசனமே இல்லாமற் போய்விடுமோ வென்று மிகவும் பயப்பட்டுப் போகாமலிருக்கிறேன். ஸரோஜா! என் கஷ்டத்திற்கும் ஒரு விடிவுகால முண்டாகுமா? என் புருஷரும் கள் குடியை விட்டுவிட்டு நேர்மையான நிலைமைக்கு வருவாரா? இருந்த 30 ரூபாய் சம்பளத்தையும் தொலைத்துக் கொண்டு விட்டாரே, மாதம் 10 ரூபாய் கொடுப்பார். அதிலேயே நான் எனக்குத் தெரிந்தமட்டில் நன்றாய் ஸம்ஸாரம் செய்து வந்தேன். அந்த 20 ரூபாயும் போதாமல் என் நகைகளையும் விற்றுக் கள் குடித்தாய் விட்டது" என்று புலம்பினாள்.

"கள் குடியினால் எவ்வளவு குடும்பங்கள் கெட்டுவிட்டன. ஒருவன் ஒரு நாள் பூராவும் பாடுபட்டு உழைத்து 8 அணா சம்பாதித்து வருகிறான். வரும் வழியிலேயே 6 அணாவுக்குக் குடித்து

விட்டு வந்து விடுகிறான். கச்சேரியில் தினந்தோறும் கள் குடியினால் விளையும் கேடுகளினால் எவ்வளவு கேஸ்கள் வருகின்றனவென்று சொல்லத் தரமில்லை. அதிலும் இன்று கொலை செய்தான், இன்று காலை வெட்டினான், காதை அறுத்தான், திருடினான், மண்டை உடைத்தான் என்று நாள் தப்பினாலும் தப்பும், குடியின் கேஸ் கோர்ட்டில் தப்புவதில்லை. பாழும் குடியினால் வீட்டிலுள்ளவர்கள் வயிறு நிறைய சாப்பாடு இல்லாமல் பல ரோகங்களுக்கு இரையாகிறார்கள். ஆனால் குடியின் கொடிய செயல் இனி சீக்கிரம் மறைந்து விடுமென்று நினைக்கிறேன். இனி குடியர்களின் சம்சாரம் வயிறு நிறையச் சாப்பிட்டு உடம்பு நிறையத் துணியுடுத்துவார்களென்பதில் ஐயமில்லை. அப்பொழுது உனக்கும் சுகமுண்டாகும். குடியினால் ஒவ்வொரு குடும்பமும் படும் கஷ்டத்தைச் சகிக்கமால் அதை நீக்கும் பொருட்டு கடவுள் ஓர் பக்திமானை அனுப்பியிருக்கிறார். உலகில் கஷ்டமும் துயரும் ஜாஸ்தியாகும் பொழுது சாதுக்களையும் அனுப்பித்துத் தானும் அவதாரம் செய்து அக்கொடுமையை நீக்குவதாகப் பகவான் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட மகான் யார் உனக்குத் தெரியுமா? அஹிம்சா தர்மத்தை அனுசரித்தும் உபதேசித்தும் வரும் மகாத்மா ஜீயேயாகும். மகாத்மாவின் மந்திரத்தைப் பின்பற்றும் ராஜாஜீயும் மற்றும் தேச பக்தர்களும் கொடிய கள் அரக்கனை ஒழிக்கும் வேலையில் முற்பட்டு ராஜாஜீ தமிழ்நாட்டில் சேலத்தில் கண்கூடாகக் கள்ளை நிறுத்தி சேலத்தின் ஏழை மக்களை உண்ணச்சோறும் உடுக்கத் துணியும் உள்ளவர்களாகச் செய்திருக்கிறார். கவலைப்படாதே! ஆண்டவன் அருளினால் உனக்கும் கஷ்டம் நீங்கிவிடும். நான் போய்க் குழந்தைகளுக்குச் சாதம் போட்டு விட்டு உனக்கும் சாப்பாடு கொடுத்து அனுப்புகிறேன். உன் கை ஸ்வஸ்தமாகும்வரையில் நான் சாப்பாடு அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு ஸரோஜா வீட்டிற்குச் சென்றாள்.

ஒரு வாரத்தில் கைப்புண் ஸ்வஸ்தமாய் விட்டது. ஏதோ கஷ்டமாக ஒருவாறு ஜீவனம் செய்துவந்தாள் ஞானம். சில அசௌகரியங்களின் காரணமாக ஞானத்தைப் பார்க்காமலிருந்த ஸரோஜா ஞானத்தின் வீட்டுக்குச் சென்றாள். கதவு பூட்டியிருந்தது. பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டதில் அவள் புருஷன் ஒரு நாள் குடித்துவிட்டு வந்துகொண்டிருக்கும் பொழுது எங்கேயோ விழுந்துவிட்டதாயும், அதனால் மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டதாயும் ஆஸ்பத்திரியில் விட்டிருப்பதாயும் கேட்டுச் சென்றவள் இந்தப் பக்கம் பிறகு வரவேயில்லை என்று விபரம் புரியாமல் சொல்லிவிட்டார்கள். மனக்கலக்கம் கொண்டவளாய் வீடு திரும்பினாள் ஸரோஜா. ஒன்று, இரண்டு மூன்று மாதங்களும் கடந்து விட்டன. விஷயம் ஒன்றும் தெரியவில்லை.

நான்காவது மாதம் புரட்சியடைந்த ஓர் குடும்பம் ஸரோஜாவுக்கு அவளுடைய வீட்டிலேயே இன்பக் காட்சி அளித்தது. அதை அவளாலேயே நம்பமுடியவில்லை. தான் காண்பது நிஜமான ஞானமும் அவளுடைய இருகுழந்தைகளும், பாழடைந்து குழிந்து சிவந்து இருந்த கண்களும் வீங்கிய வயிறும் முட்டின காலுமாய் இருந்த அவள் புருஷன் அருணாசலமும்தானா என்று திக்பிரமை யடைந்துவிட்டாள். இப்பொழுது அழகான கட்டுள்ள சரீரமும், கருணை நிறைந்த பார்வையும், காந்தி மகானின் அஹிம்சையைக் குறிக்கும் வெண்மை உடையும் கண்டு புளகாங்கிதமடைந்தாள் ஸரோஜா. ஞானம் தனது அன்பு மிகுந்த தோழியைக் கட்டிக்கொண்டு அவளுடைய ஆசீர்வாதத்தினாலும் ஆண்டவனின் அருளினாலும், தன் புருஷன் மண்டையுடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து ஞானமில்லாமலே சேலம் சென்றதாயும் அவ்விடத்தில் பல கஷ்டங்களுக்கு மேல் பிழைத்து இனிக் கள்ளுக் குடிப்பதில்லையென்று சபதம் செய்தும், பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்டும், சேலத்திலேயே கள் இல்லாத இடத்திலேயே இருந்து இப்பொழுது "மது விலக்கு"க்காக பலவிடங்களிலும் சென்று பாடுபட்டுவருவதாயும், காங்கிரஸிலேயே அதற்குத் தகுந்த ஊதியம் பெற்று வருவதாயும் சொல்லி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

கடிதம்

பிச்சைக்காரர்கள்

சட்டசபைப் பிரும்மா ஒவ்வொரு அங்கமாகக் கடைந்து சுகாதார மசோதாவை உருவாக்கிக் கொண்டுவருகிறார். வெளிக்கிளம்பும் சுகாதார மசோதா, மற்ற கட்டாய இந்தி சட்டம், கடன் நிவாரணச்சட்டம் முதலியவைகளைப் போலல்லாமல் எதிரிகளே இல்லாமல் கிளம்பும் என்று தெரிகிறது. அப்பேற்பட்ட பலமுள்ள ஒன்றுக்குச் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி முன்னெச்சரிக்கையாகவே சொல்ல வேண்டாமா ?

சுகாதார மசோதா கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களுள், பிச்சைக்காரர்கள் பிரச்னை ஒன்று. பிச்சைக்காரர்களை, கைகால் ஸ்வாதீனமுள்ளவர்கள், வியாதிஸ்தர்கள் என இரு பிரிவாகப் பிரித்தது, சென்னை நகரசபை. ஆனால் இவர்கள் விஷயத்தைப் பற்றி ஒன்றும் அவ்வளவு விமரிசையாகச் செய்ய முன் வரவில்லை. கைகால் ஸ்வாதீனமுள்ளவர்களுக்கு மாத்திரம் வேலை கொடுத்துதவ உத்தேசித்தது. வியாதியஸ்தர்கள் கதி அதோகதிதான் போலிருக்கிறது.

உண்மையில், வியாதியால் பீடிக்கப்பட்டு, வீதிகளில் கிடந்து, கண்ணுக்குக் கொடூரமான காட்சியளிக்கும், பிச்சைக்காரர்கள் தான் முதலில் கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

கோவில், குளம், முதலிய ஸ்தலங்களிலும், பொது இடங்களிலும் வியாதிஸ்தர்கள் வந்து குவிந்துவிடுகிறார்கள். அந்த இடங்களில் தான் அவர்கள், தகுந்த துறைகளாகப் பாவித்து, பிச்சை கேட்கிறார்கள். இப்படிப் பொது ஜனங்கள் ஒன்று கூடுமிடங்களில், தொத்து வியாதியுள்ளவர்களைவிட்டால் பொது சுகாதாரத்துக்குப் பாதகமல்லவா ? உத்ஸவ நாட்களில் கோயில்களுக்குள் சென்றால், அவை ஒரே வியாதியஸ்தர்கள் மயமாகக் காணப்படுகின்றன. இதை என் நிறுத்தக்கூடாது? அந்த பிச்சைக்காரர்களுக்கு உண்மையில் உதவிபுரிய வேண்டும் என்பவர்கள், அதற்காக ஒரு உண்டியைத் தயார் செய்து, அதை அந்த பொது இடத்திற்குள்ளேயே வைக்கக்கூடாதா ? பிறகு அதிலிருந்து கிடைத்த பணத்தை ஏழைகளுக்கு அன்னமளிக்கும் அன்னதான சமாஜத்திற்குக் கொடுக்கக் கூடாதா ? இதனால் பொது ஜனங்களுக்கு நன்மையும், பிச்சைக்காரர்களுக்கு சாதகமும் கிடைக்காதா ?

இவைகளைப்பற்றி ஒன்றும் கவனியாமல், மற்ற அல்ப விஷயங்களைப்பற்றி—இதன் முன் மற்ற சுகாதார சம்பந்தமான வேலைகள் —"அஜயுத்தமாக" தடபுடல் செய்வது உசிதமல்ல என்று எடுத்துக்கூற வேண்டியதில்லை. ஆகையால் இந்தப் பிச்சைக்காரர்கள் பிரச்னையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே கவனிப்பார்களா ?

"கந்தர்வன்"

தொடர் கதை!

"இல்லொளி"

"குகப்ரியை" எழுதிய புது நவீனம்

பாரத மணியில்

விரைவில் வெளியாகிறது.

"இல்லொளி"

ஒரு தமிழ் நாட்டுக் கதை! மொழிபெயர்ப்பல்ல!

இ ர க் க ம்

(ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி பி.ஏ.,பி.எல்.)

முன்னொரு காலத்தில் மகத தேசத்திலே சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஆண்மையுள்ளவனும் பலம் உடையவனும் இருந்தான். நாட்டிலுள்ள அரசர்கள் எல்லாரையும் வென்று பெரிய சக்கிரவர்த்தியாகிவிடவேண்டும், எல்லா அரசர்களும் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. சேனைகளைத் திரட்டினன். பணங்களைச் சேகரித்தான்.

அந்தக் காலத்திலே மாளவதேசத்திலே அரசாட்சி செய்துகொண்டிருந்த அரசன் யாவருக்கும் மேலான வீரனய், சக்கிரவர்த்தியாக இருந்தான். ஆதலால், ராஜ்ஜிய ஆசை கொண்ட சிற்றரசன் "என்னைப் போன்ற சிற்றரசர்களை ஒருவர் ஒருவராக ஜயித்துச் சக்கிரவர்த்தியாவதற்கு வெகுகாலம் பிடிக்கும். ஒவ்வொருவரோடும் சண்டை போடவேண்டுமாதலால் அநேகம் சண்டைகளும் செய்ய வேண்டிவரும். எல்லா அரசர்களையும்விட மாளவ தேசத்து அரசன்தான் மேலானவன். அவன் பேர்பெற்ற வில்லாளி. அவனேடு சண்டைசெய்து அவனைத் தோற்கடித்துவிட்டால், மற்ற அரசர்கள் எல்லாரும் பயந்து கீழ்ப்படிந்துவிடுவார்கள்" என்று யோசித்தான்.

ஆகையால் அவன் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய சேனைகளைத் திரட்டிக்கொண்டு மாளவ தேசத்தின்மேல் படை யெடுத்துச் சென்றான். தானும் குதிரையின்மேலேறிச் சேனையினுடைய முன் அணியிலே போனன்.

மாளவ தேசத்துச் சைன்னியமும் சண்டைக்குத் தயாராக வந்தது. இரண்டு படைகளுக்கும் நடந்த சண்டையில் மகத தேசத்து அரசன்மேல் அம்பு பாய்ந்து, அவன் காயப்பட்டுக் கீழே விழுந்தான். அவனுடைய சேனையும் பின்னிட்டு ஓடிப் போயிற்று. அவனை மாளவ தேசத்து அரசன் கைதியாகப் பிடித்துக்கொண்டான்.

ஆனல் அவனைத் துன்புறுத்தவில்லை. அவனை வெகு ஜாக்கிரதையாகப் போர்க்களத்திலிருந்து பல்லக்கின்மேல் ஏற்றித் தூக்கிக்கொண்டுபோய், தன்னுடைய அரண்மனையிலேயே வைத்து, தக்க வைத்தியம் செய்து, அவனுடைய உயிரைக் காப்பாற்றினன். அவன் குணம் அடைந்ததும், "இனிமேல் நாம் இருவரும் சண்டையிடாமல் இருப்போம்" என்று உடன்படிக்கை பேசிக்கொண்டு, அவனை தன் ஊருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

வாயார நன்றி கூறி, விடைபெற்றுக் கொண்டுவந்த மகத அரசனுடைய மனத்தில் ஒரு திவலை கூட நல்லெண்ணம் இல்லை. தன்னுடைய உயிரைக் காப்பாற்றியமாளவ அரசனிடம் அவனுக்கு அன்பு உண்டாகவில்லை. மாளவ அரசனுடைய செல்வத்தையும் சிறப்பையும் பார்த்துப் பார்த்துப் பொறாமையே அவனுக்கு உண்டாயிற்று. ஊருக்கு வந்ததும் பொறாமையும், தான் தோல்வியடைந்த அவமானமும் தூண்டவே, அவன் ஏற்கெனவே தான் கொண்டிருந்த பேராசையானது மீண்டும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது.

ஆதலால், அவன் இரகசியமாகப் படைகளைத் திரட்டி, அவைகளை யுத்த முறைகளில் நன்ருகப் பயில்வித்துவந்தான். திடீர் திடீர் என்று தன் பக்கத்திலுள்ள சிற்றரசர்களைத் தாக்கி, அவர்களைத் தோற்கடித்து, அவர்களுடைய பலத்தையும் தன் பலத்தோடு சேர்த்துக்கொண்டுவந்தான். வெற்றி உண்டாக உண்டாக அவனுக்கும் அவனுடைய படை வீரர்களுக்கும் தன்னம்பிக்கையும் யுத்த வெறியும் மிகுந்து கொண்டே வந்தன.

ஒரு சமயம் தன் படைகளை எல்லாம் திரட்டிப் பெரிய சதுரங்க சேனையுடன்

சென்று, உடன்படிக்கையை மீறி, மாளவ தேசத்தைப் படை யெடுத்து, எதிர்த்த அந்த அரசனை யுத்தத்தில் தோற்கடித்து, அவனையும் கைதியாகப் பிடித்துவிட்டான்.

ஆனால் அவனைச் சிறிதேனும் கௌரவமாய் நடத்தவில்லை. அவனுடைய காலிலும் கையிலும் விலங்கிட்டு, அவனைக் கால்நடையாய்நடத்தித்தன்ராஜ்ஜியத்துக்கு அழைத்துக்கொண்டுவந்தான். வந்த பிறகும் பல வித அவமானங்களுக்கும், துன்பங்களுக்கும் அவனை உட்படுத்தினான். பலவகையாய் அவனை இம்சித்தான். கடைசியில், சிறிது கூட ஈவிரக்கமில்லாமல், அவனுடைய கண்கள் இரண்டையும் பிடுங்கி மிகவும் கடுமையான காவலில் வைத்திருந்தான். மாளவ அரசன் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை.

ஒரு சமயம் மகத அரசன் சிறைச் சாலைக்குப் போய், மாளவ அரசனைப் பார்த்தபோது, மாளவ அரசன் "நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டபோது நான் உன்னை இப்படி நடத்தவில்லையே. இப்படி நன்றி யில்லாமல், அன்பில்லாமல் நடத்துவது நீதியா?" என்று கேட்டான்.

அதற்கு மகத அரசன் "நான் உன்னிடம் அகப்பட்டபோது, நீ என் கண்ணைப் பிடுங்கிச் சிறைச்சாலையில் வைத்திருந்தால், உனக்கு இந்தக் கதி வந்திருக்குமா? என்னை விட்டுவிட்டது உன்னுடைய முட்டாள்தனம்" என்று சிரித்தான். மாளவ அரசன் மேலொன்றும் பேசவில்லை. இத்தனை வஞ்சகத்துக்கும் கொடுமைக்கும் பதில் என்ன சொல்ல முடியும்?

ஒரு வருஷம் ஆயிற்று. மகத தேசத்திலே மாளவ வெற்றியைக் கொண்டாடும் நாள் வந்தது. அப்போது அரசனுடைய ஆட்களில் ஒருவன் சொன்னான்: "மாளவ அரசனையே இந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளச் செய்தால் மிகவும் நன்றாயிருக்கும். நம்முடைய வெற்றியை அவன் கொண்டாடும்படி செய்ய வேண்டும்" என்றான். தோல்வியுற்றுக் கண் இழந்து, சிறைச்சாலையில் கிடந்து வருந்தும் அரசனுக்கு இதைவிட மேலான அவமானம் என்ன செய்ய முடியும்? ஆதலால் அந்த யோசனை நல்ல யோசனை என்று மகத அரசனுக்குத் தோன்றிற்று.

ஆகையால் அவன் அதை ஒப்புக்கொண்டு, அந்த வெற்றிக் கொண்டாட்டத்தில் மாளவ தேச அரசனை என்ன செய்யச் சொல்லலாம் என்று யோசனை கேட்டான். அதற்கு அந்த ஆள் "மாளவ தேச அரசன் சிறந்த வில்லாளி. எந்த இலக்கையும் குறி தவறாமல் அடித்து வீழ்த்தக் கூடியவன். சத்தம் வரும் திக்கை வைத்துக்கொண்டே பக்ஷிகளையும் மிருகங்களையும் வேட்டையாடும்போது அம்புவிட்டுக் கொல்லுவான். அந்தத் திறமையை நம்முடைய நாட்டு ஜனங்களுக்கு வெற்றித் தினத்தன்று காட்டச் சொல்லலாம்" என்றான். அரசன் குதூகலமாக ஒப்புக் கொண்டான்.

இதைப்பற்றி மாளவ தேசத்து அரசனிடம் சொல்லவே, மனமுடைந்து கிடந்த அவன் இதற்கு இணங்கவில்லை. ஆனால் இணங்காவிட்டால் கொடூரமான சித்திரவதைகள் செய்வதாயும், இதற்கும் மேலான அவமானங்களுக்கு உட்படுத்துவதாயும் பயமுறுத்தவே, அவன் இணங்கினான். தன்னுடைய வில்லைக் கொண்டுவரச் சொல்லி அதற்குப் புதிதாக நல்ல நாண் ஒன்றைப் போடச் சொன்னான். தன்னுடைய அம்புகளில் நாலு அம்புகளைப் பொறுக்கி, அவற்றை வடித்துத்தீட்டி, மிகவும் கூர்மையாகச்செய்து தரச் சொன்னான். அப்படியே நடந்தன.

கொண்டாட்ட தினத்தன்று மகத அரசன் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தான். எங்கே பார்த்தாலும் அவனுடைய வீரர்கள் திரள்திரளாகக் கூடியிருந்தார்கள். பளபளவென்று பிரகாசிக்கும் கூரிய வேலைத் தாங்கியவர்கள், வில்லும் கையுமாக நின்றவர்கள், உருவின கத்தியும் கைப்பிடித்த கேடயமுமாய் நின்ற காவலாட்கள்-இவர்கள் எல்லாரும் அரசனைச் சூழ்ந்து அவனைக் காத்து நின்றனர். மற்றோர் புறத்தில் நகரத்து ஜனங்கள் அனைவரும் பலவிதப் பட்டாடைகள் உடுத்தி, ஆபரணங்கள் அணிந்து, கூட்டம் கூட்டமாய், வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

அப்போது மாளவ அரசனைக் காவலாளிகள் அங்கே அழைத்துக் கொண்டு வந்

தனர். அவனுக்குக் கையிலும் காலிலும் விலங்கிட்டிருந்ததாலும், கண் தெரியாததாலும், அவன் விலங்குகள் சப்திக்க, மெதுவாகத் தடுமாறி நடந்துவந்தான். எனினும் வருத்தம் குடிகொண்டிருந்த அவனுடைய முகத்தில் உள்ள ஒரு பொலிவும் ஒரு காம்பீரியமும் அவன் சக்கிரவர்த்தியாயிருந்தவன் என்பதை விளக்கின. அவனுடைய நிலையைக் கண்டு பலர் உள்ளூற வருந்தினர்; சிலர் அங்கங்கே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். தங்களுடைய அரசனுயினும் செய்ந்நன்றி கொன்றவன் என்று அவனைப் பலர் உண்மையில் வெறுத்தனர். ஆனுல், அவனுடைய ஆணைக்குப் பயந்து, ஒருவரும் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை.

சிம்மாசனத்திலிருந்த அரசன் அவன் வருவதைப் பார்த்துப் புன்னகையுடன் "மாளவனை அதோ அங்கே கொண்டு நிறுத்து. கைவிலங்குகளைக் கழற்றிவிடு. வில்லைக் கையிலெடுத்து எய்யவேண்டும் அல்லவா? கால் விலங்குகளையும் நெகிழ்த்திவிடு. சரியாய் நின்று நேராக எய்யட்டும். குறி தவருமல் எய்ய வேண்டாமா?" என்று சொல்லிச் சிரித்தான். வேலையாட்கள் அப்படியே செய்தார்கள். அவன் கையிலே வில்லையும் கூரிய அம்புகள் நாலு கொண்ட அம்பருத்தூணியையும் கொடுத்தார்கள்.

மகத அரசன் மறுபடியும் "அடே மாளவா! இப்போது நான்கு மாடப் புருக்களை ஒவ்வொன்ருகப் பறக்க விடுவார்கள். அவைகளின் சிறகு ஓசையை வைத்துக் கொண்டு அவற்றை எய்து கொல்லவேண்டும். கொன்ருயானுல் இன்றைக்கு உனக்கு முழுச் சாப்பாடு போடச் சொல்லுகிறேன்" என்று பரிகாசமாய்ச் சிரித்தான்.

மாளவ அரசன் "பாவம் மாடப்புருக்களையா கொல்வது? கொடிய பக்ஷி ஏதாவது இருந்தால் சொல்லு. இரக்கமின்றி மற்றப் பக்ஷிகளை வதைத்துக் கொல்லுகிற பக்ஷியாயிருந்தால் கொல்லுகிறேன்" என்ருன்.

"இன்னும் இரக்கமா? 'இரக்கம் உதவாது' என்றுதான் முன்னமேயே சொன்னேனே. அந்த முட்டாள்தனம் இன்னும் போகவில்லையா? இரங்கினதால் தானே இங்கே கண் இழந்து கிடக்கிருய்" என்று ஹா ஹா வென்று சிரித்தான் மகத அரசன்.

வில்லின் நாண் கணீரென்றது. சிரித்த வாயில் பாய்ந்தது கூரிய அம்பு. இரண்டு கண்களிலும் அம்புகள் பாய்ந்தன. அவனுடைய நெஞ்சில் பாய்ந்தது மற்ருேர் அம்பு. நான்கு அம்புகளும் தீர்ந்துவிட்டன. ஹா வென்று அலறி வீழ்ந்தான் மகத அரசன். உயிர் துடித்து இறந்தான் கொடியோன்.

மகத அரசனின் காவலாளிகள் ஒரு கணமே திகைப்படைந்து தாமதித்தனர். மறு கணத்தில் இருபது ஈட்டிகள் மின்னின. நாலு பக்கத்திலிருந்தும் வந்து பாய்ந்த ஈட்டிகள் மாளவ அரசனுடைய உடல் முழுதும் தைத்தன. அவ் வீரனுடைய உடல் நிலத்தில் விழுந்து மண்ணிற்படாமல் அவனைத் தாங்கி நின்றன. ஆயினும் அவனுடைய உயிரை அப்பொழுதே குடித்துவிட்டன.

பொய் சொல்லிய வாயையும் வஞ்சகம் செய்த மனத்தையும் பிளந்து, கண்ணுக்குக் கண்ணை வாங்கிப் பழிக்குப் பழி தீர்த்துக்கொண்ட மாளவ மன்னனுடைய வில் திறமையை மகத நாட்டு ஜனங்கள் பலர் புகழ்ந்தார்கள். வேறு சிலர் அம்மன்னனுடைய இரக்கத்தைப் புகழ்ந்தார்கள்.

(பழங் கதையை ஒட்டி எழுதியது)

தங்க வளையல்

"வஸந்தன்"

காலம் :
மாலை.

இடம் :
முரளீதரன் வீட்டுக்கூடம்.

(ஸ்ரீமான் முரளீதன் களைத்துப்போய் ஆபீஸிலிருந்து வருகிறார். அப்போது அவரது ஸஹதர்மிணி ஸ்ரீமதி ஜனககுமாரி ஜன்னலோரமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் உட்கார்ந்திருப்பதைக் கவனிக்காமல் முரளீதரன் 'கோட் ஸ்டாண்டுக்' கருகில் போய் சட்டையைக் கழட்டுகிறார்.)

முரளீதரன் : அப்பா! என்ன வேலை! பிசாசுவேலை. இந்த 40 ரூபாய் கொடுப்பதற்குள் அந்த மானேஜர் பிராணன் பூராவையும் வாங்கிவிடுவான் போலிருக்கிறதே. இப்படி வேலை செய்தால் நிச்சியம் இரண்டு மாதத்தில் பயித்தியம் பிடித்துத்தான் போகும். இப்பவே எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாக அவள் சொல்லிக்கொண்டிருக்கிறாள். இன்னும் இரண்டு மாசம் போனால் அவள் சொல்வது நிச்சயம் சரியாகக் கூடப்போய் விடும். சரி! சட்டையைக் கழட்டிவைத்து விட்டு அப்பறம்...

ஜனககுமாரி : ஹிஹ்ஹிஹ்ஹீ!...

முரளீ : ஏது? ஏண்டி? எனக்குத் தெரியாமே நின்னுண்டிருக்கியா?

ஜனகம் : நானு? இல்லியே!

முரளீ: ஒட்டுக் கேட்டுண்டிருந்துட்டுப் பொய் சொல்றதைப் பார்.

ஜனகம் : நானு பொய் சொல்றேன்? இப்போ நான் நின்னுண்டா இருக்கேன், பாருங்கோ! நான் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இல்லையா? பைத்தியம் பிடிச்சுண்டுடுத்துனு கண்கூட இப்படி?......சரி! ஏன் அப்படியே நின்னுண்டிருக்கீள். சுருக்க பனியனைக் கழட்டிப்பிட்டு டிபன் சாப்பிட வாருங்கோ. உங்களுக்காகத் தயாரா அடை பண்ணிக் கொணந்திருக்கேன்.

முரளீ : என்ன? அடையா? ஏதடீ இன்னிக்கி மழை வந்துடப்போறது. நீ நித்தியம் தோசைதானே பண்ணுவே. இன்னிக்கி மட்டும் அடை! போடு சக்கை! மழைதான் வரப்போறது.

ஜனகம் : ஆமாம்! மழை வரத்துக்குள்ளே நல்லவேளையா வீட்டுக்குவந்து சேர்ந்தீளே நனையாமெ! போகட்டும். நான் டிபன் கொண்டுவரேன். கைகால் அலம்பிண்டு வாங்கோ.

(போகிறாள்)

முரளீ : சரி! இவள் குதூகலத்தையும் நடவடிக்கையையும் அடை பண்ணியிருப்பதையும் பார்த்தால், ஓகோ, பெரிய ஆபத்து என் தலைக்குமேல் காத்துக்கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஏதோ ஒரு புடவைக்கோ அல்லது வளையலுக்கோ அடிப் போடப் போகிறாள்...உம்!

ஜனகம் : இந்தாங்கோளேன். அடுப்பங்கரைக்கி வந்துட்டா கையோடே கையாப் போட்டுடுவேன். வரீளா?

முரளீ : ஆஹா! நான் வரேன். நீ அங்கேயே உட்கார்ந்திண்டு இரு......டட்! கொண்டா டிபனை சுருக்க!

(அடுப்பங்கரையிலிருந்து அடையை எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வருகிறாள் ஜனகம். முரளீ அடையை வாங்கிச் சாப்பிடுகிறான்.)

ஜனகம் : அடை எப்படி இருக்கு? நன்னாருக்கா? கொஞ்சம் மொளகாய்ப் பொடி போடட்டுமா தொட்டுக்க?

முரளீ : வேணும்னு ரெண்டு நிமிஷம் அழுதுப் பிடறேன். ஏற்கனவே அடை ஒறப்பு கண்ணுலே தண் வந்துடும்

போலே இருக்கு. நீ மொளகாய்ப்பொடி வேறே போடறயா?...உச்! இந்தா, ஒரு டம்ளர் தண்ணு கொண்டா.

ஜனகம்: இந்த அடைதான் ஒறப்போ? நாலு மொளகாய்தானே போட்டேன். இன்னும் நிறைய ஒறப்புப்போட்ட போதெல்லாம் வாயைச் சப்புக் கொட்டிண்டு சாப்பிடுவீள்.

முரளீ: ஒறப்புத் தாங்க முடியாதெ சப்புக் கொட்டியிருப்பேன்.

ஜனகம்: குத்தம் கண்டு பிடிக்கணும்னு பிடிச்சூட்டுப் போங்கோளேன்.

முரளீ: அடியே! தூத்தம் கொண்டாடி ஒறப்புத் தாங்கமுடியல்லே.

ஜனகம்: இருங்கோ கிழே குழாய்க்குப் போய் தண் கொண்டுவரேன்... ஐயோடி! நானும் மறந்து போயிட்டேன். கிட்ட டம்ளரில் இருப்பது கண் கூடவா தெரியவில்லே?

முரளீ: அடே! என்னடீது?

ஜனகம்: பாதாங்...கீர். சாப்புடுங்கோ.

முரளீ: பாதாங்கீரா? என்னடீது? நிஜந்தானு! ஹீஹீஹீ! ஏது இன்னிக்கு அமர்க்களம் பண்ணிப்பிட்டியே. என்ன சமாச்சாரம்?

ஜனகம்: சமாசாரத்தை இதோ வந்து சொல்றேன். கிழே போய் குடத்திலே தண்ணு கொண்டுவந்து வைத்து விட்டு அப்புறம் சொல்லலாமோல்லியோ? (கிழே போகிறுள்.)

முரளீ: ஈச்வரா! இவள் செய்கிற காரியங்களைப் பார்த்தால் ஏதோ பெரிய ஆபத்துக்கு அஸ்திவாரம் தான் என்று தோன்றுகிறது. இவள் என்ன கேட்கப் போகிறுள்? ரொம்ப நாளாய்த் தங்க ஒட்டியாணம் வேண்டுமென்று சொன்னுளே. அதுக்குத்தான் பலமான அஸ்திவாரமோ?

(ஜனகம் உள்ளே வருகிறுள்.)

ஜனகம்: ஏதுக்காக இப்படி இலையிலே ஒக்காந்துண்டிருக்கீள்? என்னமோ பிரமிச்சுப் போனுப்லே இருக்கீளே. கையை அலம்பிண்டு வந்து ஒக்காந்துக்குங்கோ. நீங்க கேட்ட சமாசாரத்தை அப்போதான் சொல்லுவேன்!

முரளீ: எனக்கு நீ சொல்றது ஒண்ணும் புரியலே. எல்லாம் ஒரு புதுரா இருக்கே.

ஜனகம்: அப்படித்தான் இருக்கும். எழுந்திருங்கோ!

(முரளீ கையை அலம்பிவிட்டு வருகிறுன்)

ஜனகம்: உட்கார்ந்து கொண்டீளா? சரி! இருங்கோ சமாசாரத்தை நேரே கொண்டுவந்துடறேன்!

(உள்ளே போய் ஜனகம் துணியைப் போட்டு மூடி ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு வருகிறுள்.)

ஜனகம்: பார்த்தீளா என் கையில் இருக்கிறதை? இது என்ன சொல்லுங்கோ பார்க்கலாம்.

முரளீ: (கலக்கத்துடன்) உம்!

ஜனகம்: (குதூகலத்துடன் சிரித்துக் கொண்டு) கையிலே என்ன இருக்கு சொல்லுங்கோ பார்க்கலாம்.

(முரளீ மௌனமாக இருக்கிறுர்.)

ஜனகம்: தெரியலியே?

முரளீ: தெரியும். அதுலே ஒரு பாம்புக் குட்டியா?

ஜனகம்: உஹூம்!

முரளீ: தேள்!

ஜனகம், ஆமாம்! தேளைத்தானே பொட்டிக்குள்ளே வச்சு எடுத்துண்டு வருவா? நான் என்ன கையிலே வைச்சுருக்கேன். சொல்லுங்கோ சுருக்க!

முரளீ: பொட்டி.

ஜனகம்: அடே! எப்படித் தெரிஞ்சுது உங்களுக்கு! ஓ! இதோ துணி நகர்ந்துருக்கோ! இந்த இடுக்கு வழியாப் பார்த்துட்டீள்? ஆமாந்தானே?

முரளீ: அடஅசடே! நீதானே இப்போ கையில் பொட்டி வைச்சிருக்கிறதாகச் சொன்னே! அதைத்தான் நான் திருப்பிச் சொன்னேன்!

ஜனகம்: (சிரித்துக்கொண்டு) ஆமாம் ஆமாம்! நான்தான் சொன்னேன்! இல்லாட்டா நீங்கள்தான் இடுக்கு வாங்யாகப் பாத்துட்டீளோ! எங்கே இருக்கு இடுக்கு? காண்பியுங்கோ! யார் அசடு?

...போகட்டும்! நீங்க இந்தப் பொட்டிக் குள்ளே என்ன இருக்குன்னு சொல் லுங்கோ.

முரளீ : நட்டுவாக்களி?

ஜனகம் : ஹெஹேஹே! இல்லே!

முரளீ : இல்லாட்டாப் போ!

ஜனகம் : சொல்லமாட்டீளே!

முரளீ : எல்லாம் சொல்லியாச்சுப்போ.

ஜனகம் : என்ன சொன்னீள்?

முரளீ : பாம்பு அல்லது அதுமாதிரி தொந்தரவு கொடுக்கக்கூடிய சாமான்!

ஜனகம் : விளையாட்டா சொல்றீளா, வினயா சொல்றீளா? மூஞ்சியை ஏதுக் காக விடுவிடுன்னு வச்சுண்டிருக்கீள்? (டம்மென்று பெட்டியை முரளீயின் எதிரில் வைக்கிறாள்.)

முரளீ : நானு?

ஜனகம் : என்ன நானு? பாருங்கோ கண் ணாடியில் மூஞ்சியை.

முரளீ : சரி, சரி! என்ன இந்தப் பொட்டி யில்? எடுத்துக் காண்பியேன். எடுத் துக் காண்பிக்காமே புதுர் போட்டால் எனக்கு அப்படித்தான் கோபம் வரும்.

ஜனகம் : ஓஹோ! சரிதான். இதோ பாருங்கோ. (பெட்டியைத் திறந்து நான்கு வைர பேஸரிகளை எடுத்து வெளியில் வைக்கிறாள். முரளீ கண்ணை மூடிக்கொண்டு சோபாவில் சாய்கிறார்.)

ஜனகம் : ஏதுக்காக அப்படி மயக்கம் போட்டாப்லே கீழே விழறீள்?

முரளீ : உம்!

ஜனகம் : (பயமுறுத்தல் தொனியில்) என்ன?

முரளீ : ஒண்ணுமில்லே! இந்த வைரத் திலே அவ்வளவு பிரகாசம் வீசி கண் கூசினதால் மயக்கம் போட்டுவிட்டது.

ஜனகம் : (குழைவாக) சரிதான்! இதுலே நல்ல பேஸரியா ஒண்ணு பொறுக்க றீளா?

முரளீ : (திகைப்புடன்) என்ன நல்ல பேஸரியாவா? எனக்கு என்ன தெரி யும்?

ஜனகம் : தெரிஞ்சவரையில் போதும், பொறுக்குங்கோ.

(பதிலில்லை)

ஜனகம் : ஒங்களைத்தானே.

(பதிலில்லை).

ஜனகம் : மாட்டீளா?

முரளீ : உம்!

ஜனகம் : நிஜந்தானே?

முரளீ : உஹும்!

ஜனகம் : அப்பறம் பாத்துக்குங்கோ?

முரளீ : ஆ!

ஜனகம் : ஏதுக்காக இப்படி கடுவம் பூனை மாதிரி 'உர்'னு மூஞ்சியை வச்சிண்டி ருக்கீள்?

(பதிலில்லை)

ஜனகம் : பேசமாட்டீளே? .... அப் புறம் நான் கோவிச்சுண்டா கேக்கப் படாது.

முரளீ : கோவிச்சுக்கோ! ஒனக்கு எப் பத்தான் கோவமில்லே?

ஜனகம் : நிஜந்தானே?......எனக்கு எப் பவும் கோபந்தான். உங்களுக்கு கோ பமே இல்லை. உங்களுக்கு ஆந்தை மாதிரி 'பே'பேன்னு எப்போதும் மூஞ்சியை வச்சிக்கவே தெரியாது... பேசராளாம், பேசாள்?

முரளீ : உம்!

ஜனகம் : (ஆத்திரத்துடன்) ஏதுக்காக முக்கறீள்? உங்களைத் தேடி வாக்கப் பட்டதுக்கு இந்தமாதிரி முக்கலையும் வசவையும்தான் கேட்கணும். வந்த துலேயிருந்து ஒரு நாளைக்காவது கல கலப்பா பேச்சு, சந்தோஷம் கிடை யவே கிடையாது. தலைவிதிடியம்மா! நீங்க நல்லதா ஒண்ணு பொறுக்கப் போறீளா இல்லையா?

முரளீ : (சட்டென்று எழுந்து வாசற் கதவுக்குப் பக்கம் போகிறான்.)

ஜனகம் : இது உங்களுக்கு நியாயமா யிருக்கோல்லியோ? ஏதோ இப்படி யெல்லாம் தலையிலே எழுதியிருக்கு மென்று நான் நினைக்கலை (விம்மி அழ ஆரம்பிக்கிறாள்). இப்படி யெல்லாம் நீங்க என்னைப் படுத்தறதை அம்மா தெரிஞ்சுவிட்டால் உஹும்! உஹும்! (அழுகை ஜாஸ்தியாகிறது.)

முரளீ : பொம்மனாட்டிகளுக்கு எவ்வளவு ஜாலம்டாப்பா!

ஜனகம் : குத்திக் காமிக்கறதைப் பாரு! வந்ததுலே யிருந்து ஒண்ணும் செய்ய றத்துக்கு வகை இல்லே. அண்ணா பேஸரி வாங்கிக் கொடுக்கறேங்கறான். பொறுக்கிக் கொடுங்கோ நல்லதான்னு சொன்னா அது செய்யறதுக்குக்கூட

வலிக்கிறதாக்கும். நியாயந்தானே? (விம்முகிருள்).

முரளீ: (திகைப்புடன் அவளருகில் போகிருன்.) ஏண்டி ஜனகம்! நான் மாட்டேன்னு சொன்னேன்?

ஜனகம்: இப்பப் பேசறதைப் பார். நீங்க அப்போ 'விர்'ருன்னு பேசாமெ உட்கார்ந்துண்டு இல்லே?

முரளீ: அசடு! ஏன் அழறே? இப்படி வா! ஊஞ்சல்லே உக்காந்துக்கோ.

ஜனகம்: போறும் நீங்க சமாதானம் பண்றது!

முரளீ: ஜனகம்! என் மனசு உனக்குத் தெரியாமெ இப்படிப் பேசறே பாரு. உங்கிட்ட ஆசை இல்லாமலும் நீ கேட்கிறதைச் செய்யாமலும் எப்போதுடி நான் இருந்திருக்கேன்?

ஜனகம்: போறும். போறும். நீங்க சத்தம் போட்டுப் பேசறது யார் காதிலே யாவது விழுந்தால் சிரிக்கப் போரா.

(கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருள்)

முரளீ: (மெதுவாக)ஜனகம்! அழுகையை நிறுத்தமாட்டியே? நான் சொல்லச் சொல்ல நீபாட்டுக்கு அழுதுண்டே இருந்தால் நான் என்னடி பண்ண?

ஜனகம்: (விம்முகிருள்)

முரளீ: இந்தாடீ! அழுகையை நிறுத்த மாட்டே? நான் தான் நல்ல பேஸரியாய் பொறுக்கறென்னு சொல்றேனே...... இந்தா, இந்தா...இந்த பேஸரி நன்ருயிருக்கு. உன் மூக்குக்குப் பொறுத்தமா பெரிசா அழகாயிருக்கு. உம்! அவ்வளவு தானே. பிடி! இந்தா!

ஜனகம்: ஆமாம் இப்போ சமாதானம் பண்ணமாட்டேள். அண்ணு வாங்கிக் கொடுக்கான்னு தெரிஞ்சத்துக்கப்புறம்.

முரளீ: ஆமாம்! இந்த பேஸரி என்னுலே வாங்கிக் கொடுக்கமுடியாது பார். அசட்டுப் பிசட்டுனு பேசாதே. உளற்ருள்!

ஜனகம்: பின்னே எதுக்காக அப்போ 'உர்'னு உட்கார்ந்திண்டிருந்தீளோ?

முரளீ: ஹும்! கேக்கமாட்டடீ. நன்னு கேட்பே. என் மனசுலே இருந்த வேதனை உனக்கு என்னமாத் தெரியும். நியாயந்தான். இந்தமாதிரி பேஸரி உனக்கு இத்தனை நாளாய் வாங்கிக் கொடுக்கலேயேன்னு நான் அவமானம் பட்டுண்டு ஒரு சாணு குறுகிப்போய் உக்கார்ந்துண்டு இருக்கேன். எதுக்காக நான் கவலையா உட்கார்ந்துண்டு இருந்தேங்கறது உனக்கு என்னமாத் தெரியும்?

(வருத்தக் குறியுடன் நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிருன்)

ஜனகம்: (அழுகையை நிறுத்திவிட்டுஅருகில் வருகிருள்) ஜாலந்தானே? அண்ணு வாங்கிக் கொடுக்கப்போரான்னு தானே இப்படி என்னைச் சமாதானப் படுத்தினீள்?

முரளீ: அட போடி கிராக்கு! நீ கேட்டு நான் என்னடி வாங்காமே இருந்திருக்கேன்? இந்த பேஸரி 100 ரூபாய் இருக்கப்போறது. அதை உன் அண்ணு வாங்கிக் கொடுக்கிருனும், கிழிச்சுப்புட்டான்! நான் வாங்கமாட்டேனுக்கும் இதை!

ஜனகம்: சரி அப்போ இந்த இரண்டு ஜோடை வளையலை நீங்க வாங்கிடுங்கோ அண்ணு பேஸ்ரியை வாங்கட்டும். சரி தானே?

(இரண்டு ஜோடை தங்கவளையலை மேஜை டிராயரிலிருந்து எடுத்து அவன் கையில் கொடுக்கிருள்)

முரளீ: என்ன? (கையை நீட்டி வாங்குகிருன். கைகள் நடுங்கியதால் வளையல் கீழே விழுகிறது)

நெல் விற்பனை

திருச்சினுப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் நெல் சாதாரணமாக 350 லக்ஷ ரூபாய்கள் பொருமான அளவிற்கு உற்பத்தி ஆக்கப்பட்டு வருகிறது. ஏன் இவர்கள் இந்த ஜில்லாக்களில் விற்பனைச் சங்கங்களை அதிகப்படுத்தக்கூடாது? தற்சமயம் இவ்விடமுள்ள விவசாயிகள் உள்ளூர் மார்க்கெட்டில் தங்கள் விளை பொருள்களை விற்ருல் 60 விருந்து 68 சத விகிதம் விற்ற விலையில் தங்களுக்குக் கிடைக்கிறதாம். சிலோனுக்கு அனுப்புவதால் 59 சத விகிதம்தான் விற்ற விலையில் தங்களுக்குக் கிடைக்கிறதாம். இதில் ரயில் சார்ஜு 6 விருந்து 9 சத விகிதம் வரையில் கொடுக்கவேண்டுமாம். மீதம் மத்தியில் இருக்கும் தரகர் முதலானவர்களுக்குப் போய்விடுகிறதாம். ஆகையால் விவசாயிகளின் கூட்டுறவு ஸ்தாபனங்களால் தக்க லாபம் கிடைக்கக் கூடுமெனத் தோன்றுகிறது.

அநேக தேசங்களில் உள்நாட்டு தானிய விற்பனைக்காக வெளி நாட்டு இறக்குமதிகளைக் குறைத்தும், அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தும் விருத்தி செய்திருக்கிருர்கள். நமது நாட்டில் சர்க்கரைத் தொழில் விருத்திக்காக காப்புவரி விதிக்கப்பட்டிருக்கிறது. வெளி நாட்டு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி சணல்நார் வியாபாரத்தை விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்த மாகாணத்தில் விளையும் விளைபொருள்களுக்குத் தக்க லாபம் கிடைக்கும்படியாகத் தக்க சமயத்தில் மார்க்கெட்டிங் செக்ஷனர் வேண்டிய சௌகரியங்கள் செய்வார்களென நம்புகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்தும் தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்தும் சிலோனுக்கு வருஷத்திற்கு 60,000 விருந்து 80,000 டன்கள் வரை சிறுமணி அரிசி அனுப்பப்பட்டு வருகிறது. இவைகளை மார்க்கெட்டிங் ஆக்ட் பிரகாரம் தரம் வாரியாகப் பிரித்து அடையாளங்கள் போட்டு அனுப்பினல் வியாபாரிகள் நம்பிக்கையாக அதிகமாக வாங்க முன் வருவார்கள். இச்சட்டத்தின் பிரகாரம் சர்டிபிகேட்டுகள் கொடுத்து வெளியூர்களுக்கு அரிசியை அனுப்பி வைக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து சம்பா நெல் அதிகமாக திருச்சினுப்பள்ளி, சேலம், கோயமுத்தூர், மதுரை முதலிய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இங்கிருந்து ரயில்வே மணங்கு 3,000,000-க்குமேல் சம்பா நெல் சேகரம் செய்யப்படுகிறது. இவைகள் யாவும் கமிஷன் மண்டிகள் மூலம் விற்கப்பட்டு வருகின்றன. இவைகள் விற்பனைக்குச் சிறிய விவசாயி முதல் பெரிய விவசாயிகள் வரையில், யாவரும் ஒன்று சேர்ந்து மார்க்கெட்டிங் அசோசியேஷன் ஏற்படுத்திக் கொண்டு விற்பனை செய்தார்களானல் தக்க லாபம் அடைவார்கள். சிறிது சிறிதாக முக்கியமான சென்டர்களாகிய திருச்சி, ஈரோடு, புதுக்கோட்டை முதலிய இடங்களில் டிப்போக்கள் ஏற்படுத்தித் தங்களுடைய ஏஜன்ஸிகளையே வைத்துக்கொண்டு விற்பனைகளைசெவ்வையாக நடத்தலாம்.

அறுவடை காலத்திலேயே அதிகமான நெல் விற்பனை ஆகிவிடுவதால் விவசாயிகள் தங்கள் விலையைப் பின் அதிகப்படுத்துவதற்கு முடிவதில்லை. இதற்காக ரயில்வே அதிகாரிகள் ரயில்வே ஸ்டேஷன்களுக்குச் சமீபத்தில் கிடங்குகள் கட்டிக்கொள்வதற்கும் அனுமதி தந்திருக்கிருர்கள். இன்னும் மற்ற சௌகரியங்களும் ரயில்வே அதிகாரிகள் செய்துக் கொடுப்பார்கள். வருஷத்தில் 3,000,000 ரயில்வே மணங்கு நெல் அனுப்புவதை விட்டு அதையே அரிசியாக அனுப்பினல் 5 லக்ஷம் ரயில்வே மணங்குகளுக்குக் கொடுக்கும் ரயில் சத்தம் குறைகிறது.

வாழைப் பழங்கள்

வாழைப் பழ விற்பனையை அதிகப்படுத்துவதற்கு ரயில்வே கட்டணம் குறைவு பட வேண்டும். துரிதப் பிரயாணம் ஏற்படுத்த வேண்டும். சௌகரியம் பொருந்திய வண்டிகள் ஏற்படுத்த வேண்டுமென்று முன்பே சொன்னேன். வருஷத்தில் காவேரி நதி பாயும் ஏரியாவிலிருந்து மதராஸ் நகரமானது

மூன்று லக்ஷ ரயில்வே மணுவு எடையுள்ள வாழைப் பழங்களை எடுத்துக்கொள்கிறது. மைசூர் சமஸ்தானம் அரை லக்ஷ மணங்குக்கு மேல் அதே இடத்திலிருந்து வாங்கிக்கொள்கிறது. வட இந்தியாவுக்குப் பழங்களை அனுப்பும் பழக்கம் ஏற்படவில்லை. காரணம் அதிக தூரமிருப்பதாலும் அதிக ரயில்வே கட்டணம் கட்டவேண்டி யிருப்பதாலும்தான். ஆந்திர பிரதேசம் வட இந்தியாவிற்குச் சமீபமாக இருப்பதால் இவ்விடமிருந்து வட இந்திய வியாபாரம் செவ்வனே நடைபெறுகிறது. வட இந்தியாவில் பழங்களை விற்பனை செய்வதற்கு ஆரம்ப மூலதனம் தேவை. ரயில்வே மணங்கு 600 ஏற்றிச் செல்வதற்கு ரூ. 1,200 ரயில்வே கட்டணம் கொடுக்கவேண்டும். இவ்விதமிருப்பதால் விவசாயிகள் கூட்டுறவாகச் சேர்ந்து விற்பனை செய்யாவிட்டால் இவ்வித வியாபாரம் செய்ய முடியாது. அப்பொழுதுதான் விற்பனையின் மூலம் ஏற்படும் சொற்ப நஷ்டத்தை பொருட்படுத்தாமல் விற்பனை செய்யலாம். நமது மாகாண மார்க்கெட்டிங் செக்ஷனுனது வட இந்தியா வியாபாரத்திற்கு வேண்டிய வசதிகளைத் தேடிக் கொண்டு வருகிறது. தென் இந்திய வியாபாரம் முழுமையும் தரகர்கள் கையிலேயே இருக்கிறது. இவர்கள் தைரியமாக டில்லி, ஐக்கிய மாகாணம், பஞ்சாப் முதலிய இடங்களுக்கு வியாபாரம் செய்ய முடிகிறதில்லை.

வெற்றிலை

வெற்றிலை ஏற்றுமதி செய்வதில் நமது மாகாணம் முதன்மையாக இருக்கிறது. காவேரி நதி பாயும் ஸ்தலங்கள் இதில் அதிகமும் பங்கு எடுத்துக்கொள்கிறது. வட இந்தியாவில் உள்ள ஒவ்வொரு முக்கிய நகரங்களும் வெற்றிலை இறக்குமதியை எடுத்துக்கொள்கிறது. வட இந்தியாவில் வெய்யில் காலங்களில் 300 நகரங்களுக்கு மேல் வெற்றிலை கிராக்கி அதிகரிக்கிறது. அதனுல் விலையும் அதிகமாக்கப்படுகிறது. தற்சமயம் மற்ற சில மாகாணங்களிலும் இப்பயிர் பயிரிடப்படுகிறது. இருந்தாலும் வெற்றிலைப் பயிருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இது அதிகமும் முன்னேற்றமடையுமென்று நம்புகிறேன். தற்சமயம் விவசாயிகள் அறுவடையின்போது வந்த விலைக்கு விற்பது என்ற ஒரு பழக்கத்தை வைத்திருக்கிருர்கள். இதை மார்க்கெட்டிங் செக்ஷனுர் தக்க முறையில் நிறுத்துவார்கள்.

—கூட்டுறவு.

தேசீய முன்னேற்றத் திட்டம்

இந்தியாவில் தொழில்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்ருல் ஜெர்மனி, இதாலி, துருக்கி, ஜப்பான் ரஷ்யா இவைகளது வழியைப் பின்பற்றி முன்னேறவேண்டும். அதற்காக தேசீய சீர்திருத்த கமிஷன் பின் விஷயங்களில் திட்டம் போடவேண்டும்-

(1) தேசத்தில் மின்சார வசதி.

(2) சகலருக்கும் படிப்பு வசதி கை, கண், மூளை, மூன்றுக்கும் வேலை கொடுக்கக்கூடிய, விக்ஞான நிபுணர்கள், என்ஜினீயர்கள், ஆராய்ச்சியாளர்கள் இவர்களை உற்பத்தி செய்யக் கூடிய கல்வி வசதி.

(3) தேசத்தின் போக்கு வரவு சாதனங் நன்ருகத் திருத்தியமைத்தல்.

(4) விவசாயத்தை விருத்தி செய்வதற்கு ஒருமித்த முயற்சி செய்ய ஓர் திட்டம்.

(5) விக்ஞான அகாடமியின் மேற்பார்வையில் விக்ஞான, தொழில், விவசாய வேலைத் திட்டம்.

(6) தேசத்தின் தொழில்களைப் பற்றியும், தொழில்களின் பொருள் மூலங்களைப் பற்றியும் விசாரணை.

(7) உற்பத்தி, வினியோகம், நாணய மாற்று இவைகளைப் பற்றி தீர்மானமான பொருளாதாரக் கொள்கை.

(8) தேசத்தை ஒற்றுமைப் படுத்தக்கூடிய ஒரு குறிப்பிட்ட சமூக நிலையை உண்டாக்க ஓர் திட்டம்.

(9) மேற்சொன்ன தேசீய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் விரோதிகள் முட்டுக் கட்டைகள் போட்டால் அதை எதிர்த்து நின்று எவ்விதத் தியாகமும் செய்ய தேச ஜனங்களைத் தூண்டவும் ஒற்றுமைப் படுத்தவும் தீவிர பிரசாசம் செய்ய ஓர் திட்டம்.

—டாக்டர் கே. ஜி. நாயக்.

ஆயுர்வேதத்தில் ரோகநிதானம்

இந்திய வைத்திய முறையில் விக்ஞானமும், வேதாந்தமும் மதமும் கலந்திருக்கின்றன. திரிதோஷங்களின் சேஷ்டைகள் மூலாதாரமானவை. வியாதிகளின் காரணமே இந்த மூன்று தோஷங்கள் (வாதபித்த கபங்கள்) சமமான நிலையில் இல்லாமல் பிரகோபம் அடைவதால் தான். காலம் அர்த்தம், கர்மங்களின் மாறுபட்டாலோ அதியாலோ தான் திரிதோஷங்களும் தாதுக்களும் கோளாறடைகின்றன. இப்பேர்ப்பட்ட மூலங்களிலிருந்து நிர்ணயமாகும் வியாதி நிதானம் தான் சரியானது; விஞ்ஞானத் திற்குப்பொருந்தினது. மேல் நாட்டாரின் 'புழுவாதம்' (Germ Theory) குறுகிய நோக்கமும் எல்லையும் கொண்டது. ஆனல் நமக்கு இது தெரியாதென்று அர்த்தமல்ல.

(495-ம் பக்கம் பார்க்க)

சுகாதாரம்

சின்ன விஷயங்கள்

[டாக்டர் டி. எஸ். ரமணி]

"சின்ன விஷயங்களைப் பற்றி யாராவது அதிகம் யோசிப்பது உண்டா? அல்ப சமாசாரம் என்று அநேகம் தடவை அலக்ஷியம் செய்துவிட்டு 'ஓ இந்த விஷயத்தை ஆதியிலேயே கிள்ளி எறிந்திருக்க வேண்டும்' என்று வருந்துவது சகஜம் தானே?"

"ஆமாம். ஏதாவது இந்த மாதிரி புதிசா ஆரம்பிக்க வேண்டியது" என்றான் கிட்டு. நான் எது சொன்னாலும் ஆக்ஷேபணையில்லாமல் கிட்டு ஒப்புக்கொள்ள மாட்டான்.

ஜன்னல் வழியாக வெளியிலேயே பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் ஆழ்ந்த யோசனை செய்பவன் போல் காணப்பட்டான். எப்படித்தெரிந்து கொண்டேன் என்கிறீர்களோ—ஒரு சின்ன வழி—நகத்தைப் பல்லால் கடிக்க ஆரம்பித்தான். நகத்தைப் பல்லால் கடிக்க ஆரம்பிக்காவிட்டால் கிட்டுவுக்கு யோசனை கிளம்பாது. பள்ளிக்கூடத்துப் பையன்கள் வாத்தியார் கேள்விக்குப் பொத்தானை நெருடுவதுபோல. "பெரிய உத்தியோகஸ்தர்கள் பென்ஸில் அடியையும் நகத்தையும் கடித்து யோசனை செய்யும்போது கிட்டு மாத்திரம் பஞ்சையா?" என்று நான் சொன்னபோது திரும்பிப்பார்த்தான். முகத்தில் அசட்டுச் சிரிப்பு தோன்றிற்று. வீட்டிற்குப் போனாலோ கையின் அழுக்கு சாதத்தில் ஒட்டிக்கொள்ளும் என்று ஸ்பூனால் தான் சாப்பிடுவான்.

இன்னும் ஒரு சின்ன விஷயம். வேண்டுமானால் காலேஜு பக்கம் போய்ப் பாருங்கள். மாணவர்களின் உத்ஸாகம், விளையாட்டுப் பேச்சு, தோள்மேல் தோள் இடித்துக்கொண்டு மனதிற்கு உகந்ததைக் கவலையற்று பேசிக்கொண்டு போதல், இவையெல்லாம்விட இடையிலே ஒருவர் பற்றவைத்த சிகரெட் அநேகம் கைகள் மாறிக் கொண்டேயிருக்கும். ஒவ்வொருவரும் ஒரு 'தம்' அடிக்காமலிருக்க மாட்டார்கள். ஹாஸ்டலிலோ வீட்டிலோ போய்ப் பார்த்தால் ஒவ்வொருவரிடமும் 'டூத் பிரஷ்' பேஸ்ட்டு இவற்றைக் காணலாம். கால்மணி நேரம் பல் துலக்குவார்கள். மேகவியாதியாகிற 'ஸிபிலிஸ்' முத்தமிட்டால்கூட ஒட்டிக்கொள்ளும் என்று நன்கு உணர்ந்தவரிடம்கூட இதைக் காண்கின்றோம். தெரியாமை என்று சொல்வதிற்கில்லை. நாகரீகம் என்று விட்டு விடுவதும் முறையல்ல. பழக்கமும் சந்தர்ப்பமும் தான் காரணம்.

ஹெட்கிளார்க் வைத்தினாத அய்யரிடம் சின்ன விஷயங்களைப் பற்றியே பேசக் கூடாது. சின்ன ஸமாசாரங்களெல்லாம் குமாஸ்தாக்களோடு முடிந்துவிடும். எப்போதும் மடிப்பு கலையாமல் வெள்ளை சட்டைபோட்டுக் கொள்வதில் ஆசை. மத்தியானம் ஒரு மணிக்கு ஷர்ட்டு பொத்தானை திறந்துபோட்டுக்கொண்டு, கண்ணையும் மூடிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தபடியே ஆடி விழும்போது, உடம்போடு போட்டுக்கொண்டிருக்கிற அழுக்கு பனியன் தெரியும். உள்ளே எப்படி யிருந்தால் என்ன? வெளியே வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு ஜோராக யிருக்கவேண்டும். வைத்தினாத அய்யருக்கு சொரிசிரங்கு வருவதைப்பற்றி என்ன சந்தேகம்? கட்டாயம் வரும். டானிக்கும், ஆயிண்டு மெண்டும் எப்படி குணப்படுத்தும்?

சின்ன விஷயத்திலும் சிரிப்பு உண்டு பண்ணுகிறவர் குமாஸ்தா முத்துஸாமி அய்யர். எப்படி என்று நீங்கள் கேட்பதற்கு முன், இடுப்பிலிருக்கும் பொடி மட்டையை எடுத்து ஒருதரம் போட்டுக் கொண்டு ஜோராக ஆரம்பித்துவிடுவார். பையிலிருக்கும் கைக்குட்டையை எடுத்து மூக்கை அதற்குள்ளேயே சிந்தி இரு கைகளாலும் அதைக் கசக்குவதே வேடிக்கையாக யிருக்கும். விளாம்பழப் பச்சடி போலிருக்கும் மூக்குச்சளி கையில் பட்டா

லும் ஒரே தேய்ப்பில் சரிப்படுத்தி விடுவார். எந்தக் காரியம் ஆரம்பிக்கும்போதும் முதலில் இந்த காரியத்தை கட்டாயம் அவரிடம் காணலாம். ஓட்டலில் டிபன் சாப்பிட ஆரம்பிக்கும்போதும் இதைக் காணலாம். இந்த சமயத்தில் மூக்கை ஒரு உறிஞ்சல் உறிஞ்சி பின் மூக்கில் உள்ள சளி வயிற்றுக்குப் போவது டிபன் வேளையில் நடக்கும் அதிக சம்பவம்.

கடைசியாக ஒரு சின்ன விஷயம். ஆனால் பெரிய இடத்து சமாசாரம். தாசில்தார் தாமோதர ராவ் வரும்போதே அவர் கெடுபிடி தெரியும். எங்கேயாவது நின்று கொண்டிருக்கும்போது கோட் ஸ்டாண்டு என்று நினைத்து உங்கள் சொக்காயையும் அவர்மேல் மாட்டி விடாதீர்கள். ஒரு வேளைக்கு அவர் போட்டுக்கொண்டிருக்கும் உருப்பிடிகளின் மொத்த நம்பர் பன்னிரண்டு. வேண்டுமானால் எண்ணிப் பாருங்கள். பூட்ஸ், ஸ்டாகிங்ஸ், டிராயர், டிரௌஸர், பனியன், ஷர்ட்டு, வெயஸ்ட்டு கோட், கோட், காலர், நெக்டை, கர்சீப், தலையில் தலைப்பா, ஆக பன்னிரண்டு. கொஞ்சம்கூடக் கீழே குனியமாட்டார். பக்கங்களிலும் திரும்பமாட்டார். தப்பித் தவறித் திரும்பினால் கழுத்திலிருக்கிற காலர் நெக்டை, குனியாதே என்று ஞாபகப்படுத்த கழுத்தில் ஒரு வெட்டு வெட்டும்.

நல்ல வேளையாக அமெரிக்க ஸினிமாப் படங்கள் வந்தன. இந்த காலர் டை உபத்திரவம் குறைச்சல். போலோ காலர், அரைக் கைச் சட்டை நடைமுதலுக்கு வந்துவிட்டன. இந்தியாவோ உஷ்ண பூமி. நமக்கு எந்த வகை உடுப்பு உகந்தது என்று யாராவது யோசித்திருக்கிறீர்களா? காங்கிரஸின் மதிப்பு ஜனங்களிடம் ஏற ஏற உடைகளின் ஆடம்பரம் சற்று குறைந்திருக்கின்றது. வேஷ்டி ஜிப்பா துண்டைப் போட்டுக்கொண்டு யாரையும் போய்ப் பார்க்கலாம். ஆனால் தாமோதர ராவ் போன்றவர்கள் ஆங்கில உடையில் வரும்போது, அந்த மோகம் நம்மைப் பிடித்து சிறிது ஆட்டுகிறது.

மேல் நாடுகளில் அந்த அந்த கால முறைக்கு (Fashion) தகுந்தாற்போல் உடைகளைப்பற்றிப் படங்களும் விவரங்களும் தினசரிப்பத்திரிகைகளில் பார்க்கிறோம். இந்தியருக்கு, இந்நாட்டில் என்ன உடை போதுமானது என்று கூறுவதை நம் நாட்டு பத்திரிகைகளில் பார்த்திருக்கிறீர்களா? தலைவர்களும் டாக்டர்களும் இந்தியாவுக்கு எந்த உடை சுகாதாரத்திற்கும் நன்மதிப்புக்கும் ஏற்றது என்று தீர்மானம் செய்யவேண்டும். இது தேசத்திற்கும் நன்மை, சுகாதார முறைக்கும் மேன்மை.

சிறு விஷயங்களாக யிருந்தாலும் ஒரு பழக்கம் ஏற்படுத்தி விட்டால் பின்னிட்டுத் தள்ளுவது கஷ்டம். நம்முடைய பழக்க வழக்கங்களை நன்கு சோதித்துப் பார்ப்பது நலம்.

(493-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்படரும் சரகரும் அணுக்களைப்பற்றி விவரிக்கிறார்கள். இந்த சிறு அணுக்களால் மட்டும் வியாதி ஏற்பட்டுவிடும் என்று நமது பெரியோர்கள் கருதவில்லை. திரிதோஷங்களின் பிரகோபத்தால்தான் இந்த அணுக்கள் தேகத்தில் உண்டாகின்றன என்பது ஆயுர்வேதத்தின் கொள்கை. ஆகையால் ஜெர்ம்ஸ் என்னும் அணுக்கள் வியாதியின் சூசகங்களே தவிர காரணமில்லை. ஸர். ஜேம்ஸ் குட் ஹார்ட் என்பவர் ஆங்கில வியாதிக்கு தான சாஸ்திரமே இன்னும் முடிவான நிர்ணயத்திற்கு வரவில்லையென்றும், புழுக்கள் வியாதிகளின் பலனே தவிர காரணமில்லையென்றும் கருதுகிறார்.

—டாக்டர் ஸி. துவாரகநாத்.

புத்தகவிமர்சனம்

மாதங்கினி

(மொழி பெயர்ப்பாளர்: ஸ்ரீ. டி. என். குமாரஸ்வாமி, பி.ஏ., பிரசுராலயம்: அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர்.)

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயரின் மாதங்கினி என்னும் அழகிய வங்காள நவீனத்தை ஸ்ரீ. டி. என். குமாரஸ்வாமி தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். பங்கிம் சந்த்ர சட்டர்ஜியின் ஆழ்ந்த கருத்துக்களையும் புதுமையும் வனப்பும் கொண்ட கதாபாத்திரங்களையும் தமிழர்களுக்கு நன்றாக அறிமுகப் படுத்தியிருக்கிறார் மொழி பெயர்ப்பாளர்.

மொழி பெயர்ப்பில் பொதுவாக வாக்கியங்களின் அழகையும், வார்த்தைகளின் அர்த்த புஷ்டியையும், புத்தகத்தின் பருமனையும், படங்களையும் தவிர ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும்—மூலத்தின் உணர்ச்சியை சரிவர மொழிபெயர்ப்பாளர் எடுத்துக் காட்டிவிட்டாரா என்று. இந்தச் சோதனையில் நாம் இறங்கிப் பார்த்தால், ஸ்ரீ. குமாரஸ்வாமி பெரிய வெற்றி அடைந்துவிட்டதைக் காண நாம் கர்வப்படுகிறோம். ஸ்ரீ குமாரஸ்வாமியின் கையில் மொழிபெயர்ப்பு வார்த்தைகளை ஒட்டவைப்பதாக மட்டும் ஆகிவிடவில்லை. முதல் நூலின் உணர்ச்சியை அப்படியே தமிழில் கொண்டுவந்து பரவசப்படுத்துகிறார்.

மாதங்கினியின் கதை நமக்குப் புதியதல்ல. பங்கிம் சந்திரரின் கதா பாத்திரங்களில் மாதங்கினியும் மாதவனும் ராஜமோஹனும் தமிழர்களுக்கு மிகவும் பழக்கமாகிவிட்டார்கள்.

மாதங்கினிபோன்ற அற்புதமான இன்னும் பல வங்காளி நாவல்களை ஸ்ரீ. குமாரஸ்வாமி தமிழர்களுக்கு மொழி பெயர்த்துத் தந்து, வங்காளிகளின் கர்வத்தை அகற்றுவாரென்று எதிர் பார்க்கிறோம். "பங்கிம் சந்திரர் வங்காள பாஷையில் தான் எழுதியிருக்கிறார். தமிழர்கள் அதை வாசிக்க முடியாது. எங்களுக்குத்தான் பங்கிம் சந்திரர் உரிமை" என்று அவர்கள் இனிமேல் மார்தட்டிப் பேச முடியாதல்லவா?

யஜுர்வேதம்

(ஆசிரியர்: ஸ்ரீ எம். ஆர். ஜம்பு நாதன். பிரசுரகர்த்தர்: ஜம்புநாதன் புத்தகசாலை, சென்னை. விலை ரூ. 3.)

யஜுர்வேதத்தின் கிருஷ்ண சுக்கில மந்திரங்கள் முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்து ஸ்ரீ.எம்.ஆர். ஜம்புநாதன் ஒரு பெரிய சேவை செய்திருக்கிறார். நமது பழைய நாகரீகத்தையும் பழங்கலைகளையும் மறந்து 'நாகரீகர்களான' ஹிந்து வாலிபர்களும் பெண்மணிகளும் இந்த மொழி பெயர்ப்பைக் கொஞ்சம் வாசித்துப் பார்ப்பார்களாக! "வேதமா? சே, நமக்கும் அதுக்கும் ரொம்ப தூரம்!" என்று சொல்பவர்கள் இதைச் சற்றுப்படிக்கட்டும். அது தூரத்திலில்லை. கிட்டத்தான் இருக்கிறது; ஹிருதயத்தினருகில் இருக்கிறது என்பதை அறிவார்கள். நமது ஹிருதயத்தின் மேலான உணர்ச்சிகள் உருக்கொண்டு வந்ததை போல ஒவ்வொரு 'ரிக்'கும் அமைந்திருக்கிறது. இன்னும், நமது பழைய கிரந்தங்களைப் படிப்பது வேப்பெண்ணெய் என்று கருதுபவர்கள் கூட இதை ரஸிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்

(இரண்டாம் பாகம். மொழி பெயர்ப்பாளர்: சோ. நடராஜன். பிரசுரகர்த்தர்: கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிடெட், குமாரவீதி, கோட்டை, கொழும்பு. விலை சதம் 80)

மேற்கண்ட தலைப்பின்கீழ் ஸிலோன் தேச சரித்திரத்தை ரஸமாக ஸ்ரீ. சொ. நடராஜன் மொழி பெயர்த்திருக்கிறார். முதல் நூல் ஸ்ரீ. எஸ். ஏ. பேக்மன் என்பவரால் எழுதப்பட்டது. ஐரோப்பிய நிலையைப்பற்றியும், சமூக அரசியல் நிலையைப் பற்றியும் ரஸமான ஆராய்ச்சிகளும் அடங்கியிருக்கின்றன. தொன்று காலந்தொட்டு இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும் இருந்து வந்த சம்பந்தம் முதலியவைநன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையைப்பற்றி ஒரு தெளிவான அரசியல் ஞானம் அடைய விரும்போருக்கு இப்புத்தகம் இன்றியமையாதது.